உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்


www.aanmeegamalar.com வெளியிடும்

e-magazine


# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்


மலர்-8 இதழ்-192

பிப்ரவரி 16-28 2026


சிவராத்திரி ஸ்பெஷல்




# சிவபூசையில் சிறந்தது மகேஷ்வர பூஜை

# சிவபெருமான் உருவாக்கிய பன்றி முகக் கடவுள்

வராக அவதாரத்தில் பெருமாள் பன்றியின் முகத் தோற்றத்தில் பார்த்திருப்போம், வராக அவதாரம் தோன்றுவதற்கு முன்பே சிவபெருமான் பன்றியின் முகத்துடன் உள்ள கடவுளை, பூமியின் நலனுக்காக படைத்துள்ளார் என்பது பெரும் பாலானோருக்கு தெரிய வாய்ப்பில்லை.

அதைப் பற்றி பார்ப்போம்....!

பஞ்சுர்லி என்பது பன்றி யின் வடிவம். ஆனால், அது விஷ்ணுவின்பத்து அவதாரங்களில் உள்ள வராஹ அவதாரம் அல்ல. இதற்குப் பின்னால் ஒரு தனி கதை உள்ளது.

சிவபெருமான் வசிக்கும் கைலாயத்தில்,சிவ பெருமான் அமைத்துள்ள தோட்டத்தில் வாழும் ஒரு காட்டுப்பன்றி இறந்துவிடுகிறது. ஆனால் அந்தப் பன்றிக்கு ஒரு குட்டி உள்ளது. தாய் இறந்ததும் பன்றிக் குட்டி ஆதரவின்றி நிற்கதியாக இருப்பதை பார்த்த பார்வதி தேவி அக் குட்டியை எடுத்து வளர்க்கிறார், 'சிவ சம்புதா' என்ற பெயரையும் வைக்கிறார்.

புதிய அரவணைப்பில் வளரும் அந்தக் பன்றிக் குட்டிக்கு மகிழ்ச்சி மேலோங்குகிறது, பார்வதி தேவி வளர்க்கும் செல்லக்குட்டி என்பதால் எந்த கட்டுப்பாடும் இன்றி, தோட்டத்தை சுற்றி வருகிறது, விளையாடுகிறது.

நாளாக ஆக அதன் சேட்டையும் அதிகரிக்கிறது. சிவபெருமான் அமைத்த அந்த தோட்டத்தை பன்றிக் குட்டி அழிக்கத் தொடங்குகிறது.

தோட்டத்தை சேதப்படுத்தும் பன்றிக் குட்டியை சிவபெருமான் கொல்ல முடிவு செய்கிறார்.

செல்லமாக வளர்த்த பார்வதிதேவி சிவனை தடுத்து நிறுத்தி, பன்றிக்குட்டி செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்கிறார்.



பார்வதி தேவியின் வேண்டுகோளுக்கு இணங்க அதைக் கொல்லாமல்,பூமியில் வாழும் மனிதர்களுக்கு உதவும் நோக்கில், அந்தப் பன்றிக் குட்டியை பூமியில் காடுகள் நிறைந்த வனப்பகுதியில் சென்று வாழுமாறும், பூமியில் வசிக்கும் மக்களுக்கு இயற்கை அரணாக இருந்து இயற்கையை காக்கவும் அருள்புரிந்து பூமிக்கு அனுப்பி வைக்கிறார்.

அவ்வாறு வராக அவதாரத்திற்கு முன்பே சிவபெருமானால் பூமிக்கு கடவுளாக அனுப்பப்பட்ட 'சிவ சம்புதா' என்ற பன்றிக்குட்டிக்கு "பஞ்சுர்லி'' என்ற திருநாமத்தையும் சூட்டுகிறார்.

அதை மனிதர்களால் வழிபடப்படும்காவல் தெய்வமாக மாற்றுகிறார் சிவன். பஞ்சுர்லி தெய்வம், பயிர்களை காட்டுப்பன்றிகளிடமிருந்துபாதுகாக்கவழிபடப்படுகிறது. இந்த தெய்வம் கேரளா கர்நாடகா மலைப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களால் இன்றும் வணங்கப்பட்டு வருகிறது.

e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com

# லிங்கோத்பவர், சிவராத்திரி உருவான ஸ்தலம் திருவண்ணாமலை!

விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் தம்மில் யார் பெரியவர் என்ற சண்டை ஏற்பட்டது. அவர்களது சண்டையைத் தீர்த்து வைக்குமாறு தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

அதை ஏற்று சிவபெருமான் மிகப்பெரிய நெருப்புப் பிழம்பாக விஷ்ணு, பிரம்மா இருவர் முன்பும் தோன்றினார். அந்த நெருப்புப் பிழம்பு மண்ணுக்கும், விண்ணுக்கும் பரவி மிகப் பிரமாண்டமாக காட்சி அளித்தது.

அந்த நெருப்புப் பிழம்பு விஷ்ணு, பிரம்மா இருவரிடமும் “எனது அடிமுடியை யார் முதலில் தொட்டு வருகிறீர்களோ, அவரே இந்த உலகின் பெரியவர் ஆவார்” என்றது. உடனே விஷ்ணு வராக (பன்றி) உருவம் எடுத்து அந்த நெருப்புப் பிழம்பின் அடியை காண்பதற்காக பூமியை துளைத்துச் சென்றார்.

பிரம்மனோ அன்னப் பறவையாக மாறி, நெருப்புப் பிழம்பின் முடியை கண்டு வருகிறேன் என்று உயரே பறந்து சென்றார். பல ஆண்டுகள், யுகங்களாக



முயன்றும் விஷ்ணு, பிரம்மா இருவராலும் அந்த நெருப்புப் பிழம்பின் அடி, முடியை காண இயலவில்லை. இது ஈசனின் செயலாகத்தான் இருக்கும் என்பதை உணர்ந்த விஷ்ணு, தனது முயற்சியை கைவிட்டு திரும்பி வந்தார். அவரிடம் இருந்த ஆணவம் காணாமல் போய் விட்டது.

ஆனால் பிரம்மாவிடம் இருந்த அகந்தை மட்டும் நீங்கவில்லை. உயர பறக்க முடியாமல் சோர்வடைந்து திரும்பிக் கொண்டிருந்த பிரம்மா, ஒரு தாழம்பூவை பார்த்தார். அந்த தாழம்பூ ஈசனின் முடியில் இருந்து விழுந்து பல நூறு யுகங்களாக கீழே வந்து கொண்டிருப்பதை அறிந்தார்.

நெருப்புப் பிழம்பின் முடியை தான் கண்டதாக பொய் சொல்ல வேண்டும் என்று அந்த தாழம்பூவிடம் பிரம்மா கேட்டுக் கொண்டார். தாழம்பூவும் அதற்கு சம்மதித்தது. தரை இறங்கியதும் அந்த தாழம்பூ பொய் சாட்சி சொன்னது. அவ்வளவுதான்.... நெருப்புப் பிழம்பாக இருந்தசிவபெருமானுக்கு கோபம் பொத்துக்



கொண்டு வந்தது. அந்த நெருப்புப் பிழம்பில் இருந்து சிவபெருமான் வெடித்துக் கொண்டு லிங்க வடிவில் வெளியில் வந்தார்.

விஷ்ணுவுக்கும், தேவர்களுக்கும் கேட்ட வரங்களை எல்லாம் கொடுத்த சிவபெருமான், பொய் சொன்னதற்காக பிரம்மாவுக்கு, பூமியில் கோவில் இல்லை என்றும், தாழம்பூவை பூஜைக்கு தகுதியற்ற மலராவாய் என்றும் சாபமிட்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்தது திருவண்ணாமலையில் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம்உலகில் திருவண்ணாமலையில்தான் முதன் முதலில்அக்னி தோன்றியது என்கிறார்கள். இந்த அக்னியில் இருந்துதான் சூரியன், சந்திரன் பிரகாசங்கள் மற்றும் தீப ஒளிகள் தோன்றின என்று புராணங் களில் எழுதப்பட்டுள்ளது.

இந்த அக்னியில் இருந்து வெளியில் வந்த சிவபெருமான் “லிங்கோத்பவர்” வடிவில் காட்சிக் கொடுத்தார். இதனால் திருவண்ணாமலையில் தான் முதன் முதலில் லிங்க வழிபாடு தோன்றியது என்பது உறுதியாகிறது. மாசி மாத சிவராத்திரியன்று இந்த நிகழ்வு நடந்ததால், அது மகா சிவராத்திரி என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. ஆக, மகா சிவராத்திரி விழா தோன்றிய தலமும் திருவண்ணா மலையே.

திருவண்ணாமலையில் இருந்துதான் லிங்கோத் பவர் வழிபாடும், மகா சிவராத்திரி கொண்டாட்டமும் மற்ற தலங்களுக்குப் பரவியது.

சிவபெருமானுக்குரிய முக்கிய 25 வடிவங்களில் முதலாவது அமைவது லிங்கோத்பவர் வடிவம் தான். லிங்கம் என்பது சிவ வடிவம். அந்த லிங்கத்தில் இருந்து தோன்றிய உருவம்தான் லிங்கோத்பவர். அதாவது லிங்கத்துக்கு தலை, கை, கால் முளைத்தால் கிடைக்கும் உருவம்தான் லிங்கோத்பவர்.

சிவபெருமான் முதலில் உருவம் இல்லாமல் அருவமாகத்தான் இருந்தார். ஆனால் உலக உயிர்கள் முன்பு தோன்ற நினைத்தபோதுஅருவுருவாகவும், பிறகு உருவமாகவும் தோன்றினார். அருவத்துக்கும், உருவத்துக்கும் இடையில் நின்றதே அருவுருவ மாகும். இதுதான் திருவண்ணாமலையில் நெருப்புப் பிழம்பாக நின்ற லிங்கோத்பவர் உருவ மாகும். எனவேதான் திருவண்ணாமலையில் லிங்கோத் பவர் வழிபாடு, மிக, மிக சிறப்பானதாகக் கருதப் படுகிறது.

திருவண்ணாமலை ஆலயத்தில் கருவறை கோஷ்டத்தில் மூலவருக்கு நேர் பின்புறத்தில் மேற்கு திசை நோக்கி லிங்கோத்பவர் இருப்பதை காணலாம். இந்த லிங்கோத்பவர், மும்மூர்த்திகளின் அருளையும் ஒரே திருவுருவில் வழங்கிக் கொண் டிருப்பதாக ஐதீகம்.

பொதுவாக லிங்கோத்பவரை பார்க்கும் போதெல் லாம் அவருக்கு விளக்கு ஏற்றி வைத்து வழிபட வேண்டும். மலையில் இருட்டத் தொடங்கும் நேரத்தில் இவர் சன்னதியில் விளக்கேற்றி வழிபட்

e-magazine
aanmeegamalar.com

டால் நமது ஆணவம், அகந்தை எல்லாம் ஓடோடி விடும்.

மகாசிவராத்திரி நாளில் தமிழகத்தில் உள்ள பெரும்பாலான சிவாலயங்களில் மூன்றாம் ஜாம பூஜையை லிங்கோத்பவருக்குரிய பூஜையாக நடத்துகிறார்கள். லிங்கத்தில் இருந்து வெளிப்பட்டு அருவுருவமாக லிங்கோத்பவர் அருள்பாவித்த காலமாக இதை சொல்கிறார்கள்.

ஆனால் திருவண்ணாமலை தலத்தில் மட்டும் மகா சிவராத்திரியின் இரண்டாம் ஜாம பூஜையை லிங்கோத்பவருக்குரிய பூஜையாக நடத்துகிறார்கள்.

லிங்கோத்பவர் முதன் முதலில் திருவண்ணா மலையில் தோன்றியவர் என்ற ஐதீகத்தின் அடிப் படையில் மற்ற தலங்களுக்கு முன்பாக இரண்டாம் ஜாமத்திலேயே திருவண்ணாமலையில் பூஜைகள் நடத்தப்படுகிறது.

உலக உயிர்கள் “நான்”, “எனது” என்பன போன்ற ஆணவம், அகந்தை கொள்ளாமல், தானும் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு சிறு அணுவே என்பதை உணர்ந்து புரிந்து கொள்வதே லிங்கோத்பவர் வடிவத்தின் தத்துவமாக உள்ளது. இந்த வடிவை வழிபட்டால் உடல் நலமும், மோட்ச பிராப்தமும் கிடைக்கும். எனவேதான் இந்த வழிபாட்டை, “மோட்ச பிரதாயினி” என்று சொல்கிறார்கள்.

லிங்கோத்பவர் பூஜையின்போது மட்டும் சுவாமிக்கு நெய்பூசி, வெண்ணீர் அபிஷேகம் செய்து, பிறகு கம்பளி போர்த்தி தாழம்பூ சூட்டுவார்கள். இந்த ஒரு காலத்தில் மட்டுமே சிவனுக்கு தாழம்பூ அணிவிப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவண்ணாமலையில் மகா சிவராத்திரியன்று இந்த பூஜையை நேரில் பார்த்து தரிசித்தால் இரட் டிப்பு பலன்கள் கிடைக்கும்.

# சிவபெருமானும் வில்வ இலையும்



வில்வமரத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதால், ஒரு வில்வம் லட்சம் சொர்ண புஷ்பங்களுக்குச் சமம். இதில் ஒன்றினை ஈசனுக்கு அர்ப்பணித்தால் மகாதோஷங்களும் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாகும்.

❖❖❖

சிவனுக்கு வில்வ அர்ச்சனை செய்யும்போது, அதன் பின்பக்க நரம்பு மூர்த்தியின் மேல் படும்படி போட வேண்டும். அந்தப் பக்கம் தான் லட்சுமி வாசம் செய்கிறாா். ஒற்றைப்படை இதழ்களைக் கொண்ட வில்வம் அர்ச்சனைக்கு மிகவும் நல்லது.

❖❖❖

முதல்நாள் சாத்திய வில்வத்தை எடுத்து நீரில் கழுவி மீண்டும் சிவ பூஜை செய்யலாம். ஒரு மாத காலத்திற்கு இவ்வாறு செய்யலாம்

❖❖❖

முதல்நாள் சாத்திய வில்வத்தை எடுத்து நீரில் கழுவி மீண்டும் சிவ பூஜை செய்யலாம். ஒரு மாத காலத்திற்கு இவ்வாறு செய்யலாம்.

❖❖❖

தாமரை, வில்வம், சதபத்ரம் ஆகியவற்றால் சிவனை அர்ச்சிப்பவன் பெரும் செல்வத்தை அடைவான். நீலோத் பலம், ஜாதி மல்லிகை, பாடலம், அரளி, ஆத்தி, கோங்கு, முல்லை, பலாசம் ஆகியவற்றாலும் அர்ச்சிக்கலாம்.

## நவக்கிரகங்கள் இல்லாத பிரசித்தி பெற்ற

# சிவாலயங்கள்



e-magazine
aanmeegamalar.com

1. திருவான்மியூர் மருந்தீஸ்வரர் (சென்னை) சென்னை அருகிலுள்ள இந்த ஆலயத்தில் நவக்கிரக சன்னிதி இல்லை. எமன் வந்துவழி பட்டு, தன் பாவங்களை நீக்கிய தலம் என நம் பப்படுகிறது. இங்கு நோய் நிவாரண வழிபாடு மிகவும் பிரசித்தம்.

2. திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் (புதுச்சேரி அருகில்) சனீஸ்வரருக்குப் பெயர் பெற்ற தலம் என்றாலும் நவக்கிரக சன்னிதி இல்லை. எமன் வழிபட்டதால் சிவன் அருளே அனைத்தையும் கடந்தது என்பதை உணர்த்தும் தலம்.

3. திருவாவடுதுறை மாசிலாமணீஸ்வரர் (நாகப் பட்டினம்) பண்டைய ஞான தலம். இங் கும் நவக்கிரகங்கள் இல்லை. எமன் தன் கர்ம பந்தங்களில் இருந்து விடுபட இங்கு சிவனை வழிபட்டதாக ஐதீகம்.

4. ஸ்ரீ வாஞ்சியம் வாஞ்சிநாதர் (திருவாரூர்) இது மிகவும் விசேஷமான தலம். எமதர்மனுக்கே தனி சன்னிதி உள்ள ஒரே சிவாலயம். அதனால் இங்கு நவக்கிரகங்களுக்கு இட மில்லை. மரண பயம் தீர்க்கும் தலம் என போற்றப்படுகிறது.

5. திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் (மயிலாடு துறை) மார்க்கண்டேயனை காக்க எமனை காலால் அடக்கிய சிவன் இங்கு சம்ஹாரம் செய்ததாக தல புராணம் சொல்கிறது. அத னால் காலத்திற்கும் கிரகங்களுக்கும் மேலான தலம் என நம்பப்படுகிறது.

ஆன்மிகமலர் .காம்

6. திருமழப்பாடி வைத்தியநாதர் (தஞ்சை அருகில்) ஆரோக்கியம் அருளும் தலம். இங்கும் நவக் கிரக சன்னிதி இல்லை. எமன் வழி பட்டதால் நோய், விதி, காலம் அனைத்தும் சிவனுக்குள் அடங்கும் என நம்பிக்கை.

7. திருப்பைஞ்சீலி (திருச்சி அருகில்) வாழை மரம் தலவிருட்சம். பசுமை சூழ்ந்த ஆன்மீக தலம். இங்கும் நவக்கிரகங்கள் இல்லை. எமன் வழிபட்டதாகச் சொல்லப்படும் தலம்.

8. திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் புத்திர தோஷ நிவாரணத்திற்கு புகழ்பெற்ற தலம். இங்குள்ள நடராஜர், சிதம்பர நடராஜரை விட பழமையானவர் என நம்பிக்கை. நவக்கிரக சன்னிதி இல்லை.

9. திருப்புறம்பியம் சாட்சிநாதர் (கும்பகோணம் அருகில்) சாட்சியாக சிவன் நின்ற தலம். இங் கும் நவக்கிரகங்கள் இல்லை. எமன் வழிபட்ட தலமாகக் கருதப்படுகிறது.

## உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை

# tabloid வடிவில்

4, 8, 12, 16 பக்கங்களில்

**இதுபோன்ற**
**சிறப்பு மலராக**
**வெளியிட தொடர்பு கொள்ளவும்**

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!

தொடர்ப்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203







## செய்த பாவங்கள் அனைத்தையும் தீர்க்கும்

# கோமுக்தீஸ்வரர்

கைலாயத்தில் ஒருசமயம் சிவனும் உமையும் சொக்காட்டான் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது சிவன் தானே தொடர்ந்து வெற்றிபெற்றதாக அறிவித்துக் கொண்டார். இதனால் அம்பாள் கோபம் கொள்ளவே சிவன் அவளை பூலோகத்தில் பசுவாக பிறக்கும்படி சபித்துவிட்டார். இத்தலத்தில் சுயம்புமூர்த்தியாக உள்ள இலிங்கத்தை பசு தனது கொம்புகளால் குத்தி வெளிக்கொணர்ந்து வழிபட்டு தனது சாபம் நீங்க வேண்டியது. இறைவனும் அருள்பாலித்து அணைத்துக் கொண்டார். கோவாகிய பசுவிற்கு முக்தி அளித்ததால் கோமுக்தீஸ்வரர் என்று அழைக்கப்பட்டார்.

தேவாரப்பாடல் பெற்ற காவிரித் தென்கரைத் தலங்களில் 36வது தலம் இது. முதலாம் பராந்தக சோழனால் இக்கோயில் கற்றளியாக்கப்பட்டது. அதிட்டானம் முதல் கலசம் வரை கற்றளியாக்க அம்மன்னன் ஆவடுதுறை அரனுக்கு அய்ந்நூறு பொன்கழஞ்சுகள் கொடையளித்துள்ள செய்தி இங்குள்ள அவனது மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு தெரிவிக்கிறது.

சிதம்பரம் கோயிலுக்கு பொன் வேய்ந்த பராந்தகன் பொன்னை அளித்து திருவாவடுதுறைக் கோயிலை கற்றளியாக்கியுள்ளான். தேவார மூவராலும் பாடல்பெற்ற இத்தலம் முற்காலச் சோழர் தம் கட்டடக்கலைக்கும், சிற்பத்திறனுக்கும் மிகச்சிறந்த சான்றாகத் திகழ்கிறது. திருவாவடுதுறை ஆதினத்தின் கீழ் உள்ள இக்கோயில் அம்மன் பசு வடிவில் சிவனை வழிபெற்ற தலபுராணம் உடையது. 44 அடி உயர மிகப்பெரிய நந்தி இங்குள்ளது. பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையான திருமந்திரம் இயற்றிய திருமூலர் சமாதி அடைந்த தலம் இதுதான். அணைத்தபிரான் என்னும் சிவன் உமையை அணைத்தபடி உள்ள சிற்பம் ஒன்று இங்குள்ளது. புத்திரப்பேறு, தம்பதியர் இடையே வேறுபாடுகள் தீர இத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசன் உதவிசெய்கின்றான்.

செய்த பாவங்கள் அனைத்தையும் தீர்க்கும் சக்தி படைத்தவர் கோமுக்தீஸ்வரர்.



# வெண்ணெய்யில் உருவான நவநீதேஸ்வரர்

ஒருமுறை கடும் பஞ்ச காலத்தின் போது, தெய்வலோகப் பசுவான காமதேனு தெரியாமல் மாமிசத்தை உண்டுவிட்டதாம். இதையறிந்த சிவபெருமான் கோபமுற்று, பசுவை ஒரு புலியாக மாறும்படி சாபமிட்டார்.


தன் தவறை உணர்ந்து வருந்திய காமதேனு மன்னிப்பு கேட்க, "பூலோகத்தில் மல்லிகாரண்யம் என்ற திருத்தலத்தில் நீராடி என்னை வழிபட்டால் சாபம் நீங்கும்" என்று அருளினார் ஈசன்.

சிவனின் அறிவுரைப்படி காமதேனு இத்தலம் வந்து குளம் அமைத்து நீராடியபோது, அதன்மடியில் இருந்து பால் பெருக்கெடுத்து குளம் முழுதும் பாலாக மாறியது. இதுவே இன்று "பாற்குளம்" (க்ஷீர புஷ்கரிணி) என்று அழைக்கப் படுகிறது.

அந்தப் பாற்குளத்தில் இருந்து திரண்ட வெண்ணெயைக் கொண்டு, வசிஷ்ட முனிவர் ஒரு சிவலிங்கத்தைப் பிடித்துப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். வெண்ணெயால் ஆனவர் என்பதால் இறைவனுக்கு "நவநீதேஸ்வரர்" (வெண்ணெய் நாதர்) என்று பெயர் வந்தது.

வசிஷ்டர் தான் பூஜித்த லிங்கத்தை மீண்டும் எடுக்க முயன்றபோது, அது வெண்ணெயாக இருந்தும் கைக்கு வராமல் சிக்கிக் கொண்டது. எவ்வளவு முயன்றும் எடுக்க முடியாமல் "சிக்கல்" ஏற்பட்டதால், இந்த ஊருக்கு "சிக்கல்" என்று பெயர் நிலைத்தது!

இத்தலத்தின் மிக முக்கிய நிகழ்வு சூரசம்ஹாரத்திற்கு முன்னதாக சிங்காரவேலவர் தன் தாயிடம் வேல் வாங்கும் நிகழ்ச்சி. அப்போது முருகப்பெருமானின் திருமுகத்தில் உண்மையாகவே வியர்வை சிந்தும் அதிசயத்தை இன்றும் காணலாம்!



இக்கோவிலில் அன்னை சக்தியாயதாட்சி (வேல்நெடுங்கண்ணி) அம்பாளாக அருள்பாலிக்கிறாள். இவள் தந்த வேலே சூரபத்மனை வதம் செய்யப் பயன்பட்டது.

இது சிவஸ்தலமாக இருந்தாலும், முருகப்பெருமானின் சிங்காரவேலவர் கோலத்திற்கே அதிகப் புகழ் பெற்றது.

நம் வாழ்வின் சிக்கல்கள் அனைத்தையும் தீர்க்கும் இந்த அற்புதத் தலத்திற்கு ஒருமுறை சென்று தரிசித்து வாருங்களேன்

# ஸ்கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ள சிவராத்திரி மகிமைகள்



ராத்திரி எனப் பெயரோடு அழைக்கப்படும் விரதங்களில் சிவனை துதித்து வணங்கப்படும் விரதமே சிவராத்திரி யாகும். விஷ்ணுவு க்காகக் கொண்டாடப்படுவது வைகுண்ட ஏகாதசி விரதம். சிவனுக்காக கொண்டாடப்படுவது சிவ ராத்திரி.

சிவராத்திரி நித்ய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மகா சிவராத்திரி, யோக சிவராத்திரி என்றெல்லாம் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சிவராத்திரிகள் பல இருந்தாலும் மாசி மாதத்தில் கிருஷ்ண பட்சத்தில் வரும் புண்ணிய தினமே மகாசிவராத்திரி ஆகும். இந்துக்களி ன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை எண்ணி முழு நாளும் வழிபடும் சிறப்பான விரதம் இந்த சிவராத்திரி ஆகும். அலை பாய்ந்து அவதிப்படும் மனிதனது ஐம்புலன்க ளும் ஓரிடத்தில் ஒடுங்கி பரமாத்மாவாகிய பரம் பொருளிடம் ஒடுங்கும் இந்த `ராத்திரி' மங்கலமான ஒளி சிந்தும் ராத்திரியாகும்.

நமது ஐம்புலன்களையும் அடக்கி இறைவனது சிந்தனையோடு இறையன்பில் மூழ்கியிருக்கும் போது இந்த உலகின் இடையூறுகள் நம்மை எதுவும் செய்வதில்லை. உலகினில் உள்ள எல்லா பொருட்களுமே மாயையிடம் ஒடுங்கும். அப்படி மகா சக்தியிடம் ஒடுங்கும் காலம் இருள் நிறைந்ததாக இருக்கும்.

இந்த காலம் மகா பிரளயம் என்று சொல்லப் படுகின்றது. உலகம் எத்தனை காலம் இருக்கின்றதோ அத்தனை காலமும் பிரளயமும் உண்டு. இந்த காலத்தில் தான் உமாதேவி நான்கு காலமும் சிவனைப் பூஜித்தார். முழு முதற் கடவுளான சிவபெருமான் மனமிறங்கி உமா தேவியை நோக்கி உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார்.

அதற்கு அம்மையார் நான் தங்களை மனமுவ

ஆன்மிகமலர்

ந்து பூஜித்த இந்த நாள் சிவராத்திரி எனப் பெயர் பெற வேண்டும். இந்த தினத்தில் உங்களை முழு மனதோடும் பயபக்தியோடும் பூஜிப் பவர்கள் தங்கள் அருளினால் சகல பாக்கியங்களையும் பெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். இறைவனும்அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண் டார்.



அதனால் தான் சிவராத்திரி சிவ பூஜைக்கு சிறந்த நாளாகக்கொள்ளப் படுகின்றது. சிவராத்திரி பற்றி பல கதைகள் மூலமாகவும் சிவ ராத்திரி மகிமை கூறப் படுகின்றது. ஸ்கந்த புராணத்தில் கூறப் பட்டிருக்கும் ஒரு கதை இவ்வாறு உரைக்கிறது. குருத்ரோகி என்னும் வேடன் பலரிடம் நம்பிக்கைத்துரோக மாக நடந்து அவப் பெயர் பெற்றான்.

அவன் மீதுகோபம் கொண்டசிலர் அவனை பகல் முழுவதும் ஒரு சிவன் கோவிலில் அடைத்து வைத்திருந்தனர். இரவில் வேட்டையாடு வதற்காக வேடன் ஓர் நதியை கடந்து அக்கரை சென்றான். தரையில் தன் வலையை விரித்துவைத்துக் கொண்டே இரவு முழுவதும் கண் விழித்துக் கொண்டிருந்த வேடன் பொழுது போக்காக தான் அமர்ந்திருந்த வில்வ மரத்தின் இலைகளை உருவி உருவி கீழே வீசிக் கொண் டிருந்தான்.

அந்த வில்வ இலைகள் மரத்தடியில் இருந்த ஒரு சிவலிங்கத்தின் மீது வீழ்ந்து கொண்டிரு ந்தன. அதிகாலையில் மரத்தை விட்டு இறங்கிய வேடன், முன் சிவகணம் ஒன்று தோன்றி வணங்கி நின்றது. நீ யார்ப ஏன் என்னை வணங்குகின்றாய் என்று வேடன் ஒன்றுமே விளங்காமல் கேட்டான்.

வேடரே நேற்று பகல் முழுவதும் சிவன் கோவிலின் சிவபெருமான் திருவுருவத்தில் முன் இருந்தீர். இன்று இரவு முழுவதும் கண் விழித்து வில்வ இலைகளை பிடுங்கி மரத்தடி யில் இருந்த சிவலிங்கத்தைப் பூசித்தார். நேற்று சிவராத்திரியானதால் நீ சிவராத்திரிப் பலனைப் பெறுகிறீர். என்னுடன் வாரும் கைலாயத்துக்குச் செல்லலாம் எனக்கூறிவேடனை மரியாதையுடன் பூத கணம் அழைத்துச் சென்றது.

தான் செய்தது அறியாமலே சிவராத்திரி விரதமிருந்த வேடனுக்கே கைலாய வாசம் கிடைத்ததென்றால் சிவராத்திரியின் மகிமை பற்றி சொல்லி தெரிய வேண்டியது இல்லை. இதனை விட காத்தல் கடவுளாகிய விஷ்ணுவு க்கும் படைத்தல் கடவுளாகிய பிரம்மாவுக்கும் இடையில் யார் பெரியவர் என்ற கேள்விக்கு விடைகாண வேண்டிய தேவை ஏற்பட்டது.

இருவருக்குமிடையில் நடந்த வாக்குவாதத்தை முடிவுக்கு கொண்டு வர திருவுளங் கொண்டு அடி, முடி காணமுடியாதவாறு ஒளிப் பிழம்பாக சிவன் காட்சியளித்தார் அப்பொழு து இந்த ஒளியின் அடியையும், முடியையும் காண்பவர் எவரோ அவரே பரம்பொருள் என ஓர் அசரீரி கேட்டது. எனவே அவ்வாறு அடி முடி காண முடியாது ஆணவம் அடங்கி ஞான ஒளி பெற்ற இரவும் சிவராத்திரி எனப் படுகிறது.

இதைவிட உமாதேவியார் சிவமூர்த்தியின் திருநேர்த்திரங்களையும் ஒரு முறை மூட உலகங்கள் இருண்டன. அந்தகனமே உருத்தி ரர்கள் இறைவனை வணங்கி னார்கள். அந்த காலமே சிவராத்திரி என்று புராணங்கள் கூறு கின்றன. இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் முழு உபவாசம் இருப்பது தான் உகந்தது.

ஆன்மிகமலர்



முடியாதவர்கள் ஒரு வேளை உணவுடன் விரதத்தை மேற்கொள்ளலாம்.

விரத மிருப்பவர்கள் நாமாவளி சில அஷ்டோ த்திரம் மற்றும் சில துதிகளைச் சொல்லி வில்வ இலைகளாலும் உதிரிப் பூக்களினா லும் அர்ச்சனை பண்ண வேண்டும். இரவு முழுவதும் நித்திரை விழித்திருந்து பூஜை செய்ய வேண்டும் சிவன் கோவிலில் நித்திரை விழிப்பது தான் சிறந்தது. இரவு முழுவதும் நித்தி ரை விழிக்க முடியா தவர்கள் அர்த்த ஜாமப் பூஜையிலாவது விழித்திருக்க வேண்டும்.

வில்வ இலையிட்ட நீரை அருந்தி உபவாசமி ருந்து சிவபுராணத்தை பாராயணம் செய்வது மிகச் சிறப்பானதாகச் கொள்ளப்படுகின்றது. மகா சிவராத்திரி அன்று தான் நான்கு சாமங் களிலும் ருத்திராபிஷேகம் செய்து வில்வத் தால் சஹ்ரநாம அர்ச்சனை செய்ய வேண்டும் அப்படி செய்யும் போது இவ்வுலக சுகமும் மறுமையில் கைலாசமும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

மனம் நிலைப்பட்டு இறை சிந்தனையோடு புனிதமாக இந்த விரதத்தை மேற்கொண்டால் அதற்கான பலன் நிச்சயம் கிடைக்கும். சிவன ருள் பெற சிவநாமம் சொல்லி விழித்திருந்து விரதமிருந்து பூஜைகளை கண்ணாரக் கண்டு புண்ணியந் தேட வேண்டும். சிவ விரதம் மிகச் சிறப்பு வாய்ந்தது..

# புண்ணியங்களுள் சிறந்தது சிவபுண்ணியம்

## சிவபுண்ணியத்துள்ளும் மிக சிறந்தது சிவபூசை

# சிவபூசையிலும் சிறந்தது மகேஷ்வர பூஜையாகும்



முடிவில்லாத மகா அண்டத்தை உடையவனை மகேஷ்வரன் என்கிறோம். மகேஷ்வரனுக்கு செய்யும் பூஜை மகேஷ்வர பூஜை.

ஆதியும் அந்தமும் அற்ற அந்த மகேஷ் வரனோ, அவனுடைய தொண்டர்களின் உள்ளத் துள் ஒடுக்கம் என்கிறார் ஔவையார். இந்த தொண்டர்கள் மகேஷ்வரர் எனப்படுவர்.

அத்தகையபெருமை உடைய மகேஷ்வரர் களுக்கு செய்யும் பூஜை மகேஷ்வரபூஜையாகும்.

புண்ணியங்களுள் சிறந்தது சிவபுண்ணிய மாகும். அந்த சிவபுண்ணியத்துள்ளும் சிவபூசை மிகவும் சிறந்த தாகும். அந்த சிவபூசையிலும் சிறந்தது மகேஷ்வர பூஜையாகும். மகேஷ்வர பூஜை எப்படி செய்யப் படுகிறது?

மகேஷ்வரர்களை விதிப்படி பூசித்து அவர்க ளுக்கு அன்னம் ஊட்டுதலாகும். மகேஷ்வரர் களை தூரத்தே கண்டவுன், அவர்களது சாதி, குலத்தை ஆராயாமல், ஏழை செல்வந்தர் என்றும் பாராமல், திருநீறும், கண்டமணியும் அணிந்திருக் கும் அந்த அடியவர்களை, மனிதர் என்றும் எண் ணாமல், சிவபெருமானே வந்திருப்பதாக எண்ணி உபசரிக்க வேண்டும்.

சிவனின் மீது இருக்கும் அன்பினாலும், அவன் அடியவர்களின் மீது இருக்கும் அன்பினாலும், தம் இருப்பிடத்தை விட்டு எழுந்து, அகமகிழ்வோடும் முகமலர்ச்சியோடும், தம் கைகளைக் குவித்து



அவர்களை எதிர்கொள்ள வேண்டும்.

அவர்கள் அருகில் சென்றபின், அவர்களின் திருவடிகளில் விழுந்து வணங்கி, இனிமையான சொற்களைப் பேசி வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

அவர்களை வசதியான இடத்தில் இருக்கை யில் அமரச் செய்து, பூஜை செய்ய உகந்த கரக நீரைக் கொண்டு அவர்களின் திருவடிகளை விளக்க வேண்டும். பின்னர், மெல்லிய சுத்தமான ஆடையினால் அவர்களின் திருவடிகளை ஒற்றி உலர்த்த வேண்டும்.

பின்னர் அவர்களை பூசை செய்வதற்கு உகந்த மலர்களால் பூசித்து, தூபதீபம் காட்டி, பூமியில் விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும்.

கைப்பு, புளிப்பு, தித்திப்பு, துவர்ப்பு, கார்ப்பு, மற்றும் உவர்ப்பு என்னும் அறுவகைச் சுவை யை உடைய உணவை, உண்ணப்படுவது,தின்னப் படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது என நால் வகைப்படும் உணவுகளை, அவரவர் வசதிப்படி அமுது செய்விக்க வேண்டும். நான் மனித பிறவி பெற்ற பயனை இன்றல் லவோ பெற்றேன் என்று அவர்களிடம் மன மகிழ்வோடு கூற வேண்டும்.

சிவதருமோத்தரம்,

“புலையரே யெனினுமீசன் பொலன்கழ லடியிற் புந்தி நிலையரே லவர்க்குப் பூசை நிகழ்த்துத தாளி னேச மிலரெனி லியற்றும் பூசைப் பலந்தரு வாரே யாரே.”

அவர்கள் விடைபெற்று போகும் போது, அவர்களோடு கூடவே பதினான்கு அடி சென்று வழியேற்றிவிட வேண்டும். இத்தனை பெரும் சிறப்பு பெற்றது மகேஷ்வர பூஜை.

உ

சிவம் வாழி! குருவாலைப் பெண் வாழி! சித்தர்கள் வாழியவே !

# ஓம் ஸ்ரீ சற்குரு சச்சிதானந்தம் பழனிசாமி சுவாமிகள்

மோகன் தோட்டம், கணக்கன்பட்டி, பழனி

## ஜீவ சமாதி குருபூஜை பன்னிரண்டாம் ஆண்டுப் பெருவிழா

**நாள்: 28.02.2026**
**சனிக்கிழமை**

குருவடி சரணம் திருவடி சரணம்

கணக்கன்பட்டி செல்வோம் கவலைகளை தீர்ப்போம்




### நிகழ்ச்சி நிரல்

**27.2.2026 வெள்ளிக்கிழமை**

காலை 6 மணி முதல் 10 மணிவரை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் முற்றோதல்

மாலை 5 மணி ஆன்மீக சொற்பொழிவு
7 மணி பக்தி இன்னிசை

**28.2.2026 சனிக்கிழமை**

காலை 3.00 மணி சித்தர் முறை வேள்வி பூஜை காலை 9 மணிமுதல் சிறப்பு ஆன்மீகச் சொற்பொழிவுகள்

நண்பகல் 11.00 மணி தீபாராதனை, மகேஸ்வர பூஜை

பிற்பகல் 2.00 மணி பக்தி இன்னிசை

தினமும் அன்னதானம் நடைபெறும் இப்புண்ணிய பூமியில் 27.02.2026 வெள்ளிக்கிழமை மற்றும் 28.02.2026 சனிக்கிழமை குருபூஜை சிறப்பு அன்னதானம் நடைபெறும்

## ஓம் ஸ்ரீ சற்குரு பழனி சுவாமிகள் அறக்கட்டளை

மோகன் தோட்டம், கணக்கன்பட்டி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - 624 613

94867 76551 94682 12345

www.sarguru.org பதிவு எண்:02-BK IV-2014

நல்லதே நடக்கும்!!!

நன்கொடை செலுத்த ஸ்கேன் செய்யவும்
https://sarguru.org/donation

# நமசிவாய மந்திரமும் திருநீறும் நமக்குத் துணையிருக்கும்

# மார்க்கண்டேயன்

“மிருகண்டு என்பவர் பெருந்தவ முனிவர். அவருக்கும் அவரது பத்தினியார் மித்ராவதிக்கும் புத்திரப்பேறு இல்லாமை வாழ்க்கையில் பெருங் குறையாக இருந்தது !.

இவர்கள் இருவரும் காசிக்குச் சென்று மணி கர்ணிகையில் நீராடி, விஸ்வநாதரை நினைத்து, ஓராண்டு காலம் கடுந்தவமியற்றினர்.

அந்த தவத்திற்கு மகிழ்ந்து சர்வேஸ்வரன் அவர்முன் தோன்றி, “யாது வரம் வேண்டும்?’’ என வினவ, முனிவர் புத்திரப்பேறு வேண்டும் என்று வேண்டினார்.”

முனிவருக்கு புத்திரப்பேறு வரத்தை அளிக்கும் முன் சிவன், “நூறு வயது வரை வாழும் பிள்ளை வேண்டுமா, அல்லது பதினாறு வயதே வாழக்கூடிய புத்திரன் வேண்டுமா? இதில் நூறு வயது வரை வாழும் பிள்ளைக்கு ஊமை, செவிடு, முடம், வியாதி, சகல தீக்குணங்களும் இருக்கும். பதினாறு வயது வரை வாழும் புதல்வனோ மகா அழகனாய் இருப்பான். சகல கலைகளிலும் வல்லவனாய் இருப்பான். என் மீது மட்டற்ற பக்தி பூண்டு வாழ்வான். இவர்களில் எந்த மாதிரி புத்திரன் உனக்கு வேணடும்?’’ என்றார்.

முனிவர் எந்தப் புத்திரனை வேண்டுவார்..! நூறு வயது வரை செவிடாகவும் குருடனாகவும் வியாதியஸ்தனாகவும் இருக்கும் பிள்ளையை எவர்தான் வேண்டுவார்? குறைந்த வயது வாழும் புத்திரனையே தேர்வு செய்து வேண்டினார் அவர். “தந்தேன்’’ என்று புத்திரப்பேற்றை நல்கி விட்டு மறைந்தார் விஸ்வநாதர்.

காசியில் தவம் முடித்ததும் பத்து மாதத்தில், முனிவரின் பத்தினி அழகான ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றார். இளஞ்சூரியனைப் போல ஒளி வீசினான் அவன். பிரம்ம தேவரே வந்து குழந்தைக்கு “மார்க்கண்டேயன்’ என்று பெயர் சூட்டினார். குழந்தை மகா புத்திமானாக இருந்தான். ஐந்து வயது ஆவதற்குள்ளாகவே சகல கலைகளையும் கற்று வளர்ந்து விட்டான்!



அதோடு, அறிவு,அடக்கம், பெரியவர்களை மதித்தல், அளவிடா சிவபக்தி ஆகியவையோடு கண்டார் வியக்கும் வண்ணம் வாழ்ந்தான். ஆயிற்று... அவனுக்கும் பதினைந்து வயது முடிந்து பதினாறு வயது பிறந்தது! இதுவரை தன் மகனைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த மிருகண்டு முனிவருக்கும் அவர் பத்தினிக்கும் இப்போது கவலை பிறந்தது.

“இன்னும் ஓராண்டுதானே நமது அருமை மகன் ஜீவித்திருப்பான்?’ அதை எண்ணும் போதே தம்பதியர் விசனக்கடலில் மூழ்கினர். தமது பெற்றோரின் இந்த வருத்தத்திற்கு என்ன காரணம் என்று புரியாமல் தத்தளித்த மார்க்கண்டேயன், அதற்கான காரணம் என்ன என்று பெற்றோரைத் துளைத்து எடுத்தான். அவர்களும் வேறு வழியின்றி சிவபெருமான் அளித்த வரத்தின் விளைவாக அவன் இன்னும் ஓராண்டே வாழ முடியும் என்பதைக் கூறி வருந்தினர்.

இதைக் கேட்ட மார்க்கண்டேயன், “தந்தையே! நீங்கள் இதற்காகத் துளியும் வருந்த வேண்டாம். நமசிவாய மந்திரமும் திருநீறும் நமக்குத் துணையிருக்கும். நம்மைக் காக்கும் சிவன் நம்மைக் கைவிடார். எனவே துணிவோடு இருங்கள்!’’ என்றுகூறி விடைபெற்று காசிக்குச் சென்று மணிகர்ணிகையில் நீராடி, சிவலிங்கம் ஒன்றை நிறுவி அதற்கு நறுமலர் சாத்திவணங்கி தவம் செய்யலானான்.

“சிவபெருமானும் அவனது தவத்தில் இன்புற்று அவன் முன் தேன்றி “”யாது வரம் வேண்டும்?’’ என்று வினவ, மார்க்கண்டேயன் அவர் காலடியில் விழுந்து வணங்கி அவரைப் பலவாறு போற்றித் துதித்துத் தன்னைக் காலன் கைப்படாவண்ணம் காத்தருள வேண்டுகிறான். அவரும் “”மார்க்கண்டேயா! நீ அஞ்ச வேண்டாம். அந்தகனின் பிடியிலிருந்து நம் அருள் உன்னைக் காப்பாற்றும்!’’ என்று வரமருளி மறைந்தார்.

மார்க்கண்டேயர் தன் வாழ்நாளைப் பற்றிக் கவலைப்படாமல் சதா சிவபூஜையில் திளைத் திருந்தார். பதினாறு ஆண்டு முடிந்தது. யமதூதன் சிவபூஜையிலிருந்த மார்க்கண்டேயனை அணுக அஞ்சி மேல் உலகு சென்று யமனிடம் விஷயத் தைக் கூறுகிறான்.

யமன் தன் கணக்கரான சித்திரகுப்தனை விளித்து மார்க்கண்டேயனது கணக்கைக் கூறு மாறு கேட்கிறான்!

சித்திரகுப்தனோ, “”பிரபு! மார்க்கண்டேயனுக்கு ஈசன் தந்த பதினாறு ஆண்டுகாலம் முடிந்தது. விதி யை வென்றவர் எவருமிலர். மார்க்கண்டேயரின் சிவபூஜையின் பலனாய் அவருடைய புண்ணியம் மிக அதிகரித்து விட்டது. அதனால் அவர் நமது உலகிற்கு வர நியாயமில்லை. நேராகக் கைலாயம் செல்ல தயாராய் இருக்கிறார்!’’ என்றார்.

உடனே யமன் தனது அமைச்சனான காலனை அழைத்து மார்க்கண்டேயனைப் பிடித்து வரும்படி



ஆணையிடுகிறான். காலன் மார்க்கண்டேயனிடம் சென்று மிகவும் நயமாகத் தன்னுடன் வந்து விடுமாறு அழைக்கிறான். தன்னுடன் வந்தால் மார்க்கண்டேயனுக்கு யமன் இந்திரப்பதவி வாங்கித் தருவார் என்றும் ஆசை காட்டுகிறான்.”

ஆனால் மார்க்கண்டேயனோ, “போம் அய்யா! சிவனடிக்கு அன்பு செய்தோர் இந்திரப் பதவி என்ன, வேறு எந்தப் பதவியையும் விரும்பார். போய் உம் எஜமானிடம் சொல்லும்!’’ என்று கூறி விடுகிறான்.

இதனையறிந்த யமதர்மராஜனுக்கு கடுங் கோபம் வந்தது. அவனோ தன் வாகனமேறி பாசக்கயிற்றைச் சுழற்றியபடி மார்க்கண்டேயனை அடைந்து, “மார்க்கண்டேயா! என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ? ஈசனார் தந்தது உனக்கு பதினாறு வயதுதான் என்பதை மறந்தாயா? நீ புரியும் சிவபூஜை உன் பாவத்தை நீக்குமேயன்றி நான் வீசும் பாசக்கயிற்றைத் தடுக்காது. பிறப்பு, இறப்பு என்னும் துன்பம் கமலக்கண்ணனுக்கு

முண்டு. எனக்குமுண்டு. பிறப்பு, இறப்பு அற்ற வர் பரஞ்சுடர் ஒருவரே. தேவர், மூவர் மற்றும் எவர் உன்னைக் காப்பாற்ற முயன்றாலும் உன் உயிரைக் கொண்டு போகாமல் நான் திரும்ப மாட்டேன்!’’ என்று அனல் பறக்கக் கூறினான்.

ஆனால் மார்க்கண்டேயனோ, “எமதர்மராஜனே! சிவனடியார் பெருமையை நீ உணரவில்லை.

e-magazine
aanmeegamalar.com



முடிவு ஏற்பட்டாலும் நான் சிவபதமடைவேனே தவிர உன்னுடன் வரமாட்டேன்!'' என்று கூறி சிவலிங்கத்தைத் தழுவி நின்றான்.

யமனும் மார்க்கண்டேயனை அவன்அணைத் திருந்த சிவலிங்கத்தோடு தன் பாசக் கயிற்றை வீசி இழுத்தான். உடனே சிவபெருமான்சிவலிங்கத் தினின்று வெளிப்பட்டு, ''மார்க் கண்டேயா! நீ அஞ்சாதே..!'' என்று கூறி தன் இடது பாதத்தைத் தூக்கி எமதர்மராஜனை உதைக்க அவன் தன் பரிவாரங்களுடன் உயிர் துறந்தான்.

சிவபெருமான் மார்க்கண்டேயனுக்கு அந்தமிலா ஆயுளை வழங்கி மறைந்தார். மார்க் கண்டேயர் மகிழ்வுடன் இல்லம் ஏகி தன் பெற்றோ ரிடம் நடந்த விஷயங்களைக் கூற, அவர்கள் சிவபெருமானின் கருணையை எண்ணி எண் ணிக் கண்ணீர் மல்கினர்.

இது இப்படி இருக்க யமதர்மராஜன் உயிர் இழந்ததால் பூமியில் எவருக்கும் மரணமேயில் லாமல் போய் விட்டது! அதனால் மக்கள் பெருக்கம் அதிகமாகி பூமி அந்த பாரத்தால் நிலை தடுமாறியது. இதனைக் கண்ட தேவர்கள் அனை வரும் சிவபெருமானிடம் வேண்ட, அவர் யமனை உயிர்ப்பித்து அவன் தொழிலைத் தொடருமாறு பணித்தார்!

இந்த நிகழ்ச்சியைத்தான் திருப்பரங்குன்றம் திருப்புகழ்

''கறுக்கு மஞ்சன விழியிணை
அயல் கொடு'' பாடலில்
''சினத்தொடுஞ் சமனுதை பட நிறுவிய''

என்ற அடிகளில் அருணகிரிநாதர் குறிப்பிடு கிறார்.

ஆன்மிகமலர்



# மகா சிவராத்திரி

## கண்விழித்து நான்கு கால பூஜைகளை தரிசித்தால் கிடைக்கும் பலன்

மாசி மாத தேய்பிறைச் சதுர்த்தசியில் கடை பிடிப்பது மகா சிவராத்திரி எனப்படும். இந்த ஆண்டு மகா சிவராத்திரி பிப்ரவரி 15 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

பிரளய காலத்தில் உலகம் முற்றிலுமாக அழி யாமல் இருக்க இந்த அகிலத்தின் அன்னையான அகிலாண்டேஸ்வரி, ஈசனை மகா சிவராத்திரி அன்று நான்கு ஜாமத்திலும் பூஜை செய்தார்.

முருகப்பெருமான், சூரியன், இந்திரன், யமன், அக்கினி, குபேரர் போன்றவர்கள் மகாசிவராத்திரி பூஜை செய்து பலன் அடைந்தார்கள்.

அதுபோல பிரம்ம தேவன், மகாசிவராத்திரி அன்று விரதம் இருந்து சிவபெருமானை வழிபாடு செய்ததால் சரஸ்வதி தேவி பிரம்ம தேவனுக்கு மனைவியாக அமைந்தார்.

ஸ்ரீமகாவிஷ்ணு இந்த சிவராத்திரி விரதத்தை கடைபிடித்ததால் சக்ராயுதத்தை பெற்றார். அத் துடன் ஸ்ரீமகாலஷ்மியை மனைவியாக அமையப் பெற்றார் என்கின்றன புராணங்கள்.

மகாசிவராத்திரி அன்று இரவில் உலகிலுள்ள எல்லா லிங்கங்களிலும் சிவன் தோன்றுகிறார் என் பது ஐதீகம். மகா சிவராத்திரி தினத்தில் நான்கு கால பூஜைகள் அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெறும், இதில் பங்கேற்று இறைவனை வழிபட வேண்டும்.

மகாசிவராத்திரி தினத்தன்று சிவாலயம் சென்று பஞ்சாட்சரம் அல்லது சிவ நாமத்தை ஜெபிக்க வேண்டும்.



மகாசிவராத்திரி தினத்தில் இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்து சிவாலயத்தில் நடைபெறும் நான்கு ஜாமப் பூஜை வழிபாடுகளின் போது லிங்க தரிசனம் செய்தல் மற்றொரு முக்கிய விதியாகும். சிவபூஜை விதி தவறாமல் நான்கு ஜாமத்தும் ஜாமத்திற்கு ஒரு முறையாகப் பூஜை செய்ய வேண்டும்.

ஆன்மிகமலர் .காம்

அறிந்தோ அறியாமலோ கூட ஒருவன் மகா சிவராத்திரி அன்று விழித்திருந்தால் புண்ணியம் கிடைக்கும். மகாசிவராத்திரியன்று சிவன் கோயில் களிலோ மற்றைய கோவில்களிலோ நான்கு ஜாமமும் நடைபெறும் பூஜை வழிபாடுகளில்கலந்து கொண்டும் தானதருமங்கள் செய்து சிவபெருமா னின் புகழ் பாடியும் சிவபுண்ணியம் அடையலாம்.

## முதல் ஜாமம்

பிப்ரவரி 15 மாலை 6.15 மணி முதல் இரவு 9.25 மணி வரை உள்ளது. அந்த காலத்தில் சிவனுக்கு பஞ்ச கவ்ய அபிஷேகம், சந்தனப் பூச்சு, வில்வம், தாமரை அலங்காரம், அர்ச்ச னை, பச்சைப் பயறுப் பொங்கல் நிவேதனம், ரிக்வேத பாராயணம் செய்ய வேண்டும்.

## இரண்டாம் ஜாமம்

பிப்ரவரி 15 ஆம் தேதி இரவு 9.25 மணி முதல் நள்ளிரவு 12.34 வரை உள்ளது. இந்த நேரத்தில் சர்க்கரை, பால், தயிர், நெய் கலந்த ரவை, பஞ் சாமிர்த அபிஷேகம், பச்சை கற்பூரம், பன்னீர் சேர்த்து அரைத்து சாத்துதல், துளசி அலங்காரம், வில்வம் அர்ச்சனை செய்ய வேண்டும். பாயசம் நிவேதனம், யஜுர் வேத பாராயணம் செய்தல் வேண்டும்.

## மூன்றாம் ஜாமம்

பிப்ரவரி 15 நள்ளிரவு 12.34 முதல் அதிகாலை 3.44வரை உள்ளது இந்த நேரத்தில் தேன் அபிஷேகம், பச்சை கற்பூரம் சாத்துதல் வேண்டும். மல்லிகை அலங்காரம், வில்வம் அர்ச்சனை செய்து எள் அன்னம் நிவேதனம், சாமவேத பாராயணம் செய்து வழிபடுவார்கள்.

## நான்காம் ஜாமம்

பிப்ரவரி 16 அதிகாலை 3.44 முதல் காலை 6.54 மணிவரை உள்ளது. இந்த நேரத்தில் சிவனுக்கு கருப்பஞ்சாறு அபிஷே கம், நந்தியா வட்டை மலர் சாத்துதல், அல்லி, நீலோற்பவம், நந்தியா வர்த்தம் அலங்காரம், அர்ச்சனை, சுத்தான்னம் நிவேதனம், அதர்வண வேத பாராயணம் செய்வார்கள்.

சிவராத்திரி அன்று இரவு முழுவதும் கண் விழித்து ஸ்வாமியை தரிசித்து வழிபாடு செய்ய முடியாவிட் டால் கூட, லிங்கோற்பவ காலமாகிய இரவு 11.30 மணி முதல் 1மணி வரை உள்ள காலத்திலாவது சிவ தரிசனம் செய்து வழிபட வேண்டும். ஏனெனில் இந்த நேரத்தில் தான் சிவன் ஜோதிலிங்கமாக தோன்றிய நேரமாக கருதப்படுகிறது.

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 195 இதழ்களையும்

டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்



# கேரளா மாநிலத்தை உருவாக்கி 108 சிவன் கோவில்களை பிரதிஷ்டை செய்த

# பரசுராமர்

e-magazine
aanmeegamalar.com

ஜமதக்னி முனிவருக்கும் ரேணுகாதேவிக்கும் குமாரனாகத் தோன்றினார் பரசுராமர், இவர் மகா விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஆறாவது அவதாரமாகும்.

அவர் போர்க்கலையில் வல்லவராகத் திகழ்ந்தார். குறிப்பாக, வில்வித்தையில் அவரை விஞ்சியவர் எவரும் இல்லை.

அவர் மிகுந்த கோபம் உள்ளவர்.

எதற்கும் எவருக்கும் அஞ்சாதவர்.

தமது தந்தையான ஜமதக்னி முனிவரைக் கொன்ற கிருதவீர்யன் அவன் மகன் கார்த்தவீரியன் போன்றவர்களை அழித்தவர்.

கிருதவீர்யன் என்னும் அரசன் தன் தந்தையைக் கொன்றதால், அந்த குலத்தின் மீது கடும் கோபம் கொண்டு அனைவரையும் அழிப்பதில் மகிழ்ச்சி கொண்டவர்.

அவரால், அந்த குலமே அழிந்து விடும் நிலை உண்டானதால், காசிபன் என்ற முனிவர் அவரிடம் சென்று, அவர் அதுவரை வென்ற பூமியைத் தானமாகக் கேட்டார்.

‘‘அப்படியே தந்தேன்’’ என்றார் பரசுராமர். பின்னர், காசிபர் அவரிடம் ‘‘நீ எனக்குத் தந்த பூமியை விட்டுச் செல்க’’ என்றார்.

ஆன்மிகமலர்

உலகை ஜெயித்து வைத்திருந்த பரசுராமர் எல்லா இடத்தையும் காசிபரிடம் கொடுத்து விட்டதால், அவருக்குப் பூமியில் வசிக்க இடமில்லாமல் போய்விட்டது. அவர் மேற்கு மலைத் தொடர் மீது ஏறி நின் றார். கடல் ஆர்ப்பரிப்பதைக் கண்டார்.

தனது கொடிய பரசு(மழு) ஆயுதத்தை வீசிக் கடலிடம் ‘‘விலகிச் சென்று புதிய நிலப் பகுதியை



அளிப்பாய்'' என்றார்.

அவரது கோபத்திற்கு அஞ்சிய கடலரசன் நேரில் வெளிப்பட்டு, புதிய நிலப்பரப்பை அளித்த துடன் அதில் அளவற்ற செல்வங்களைக்கொண்டு வந்து நிறைத்தான்.

அதைக் கண்டு மகிழ்ந்து பரசுராமர், புதிய உலகைப் படைத்தார். அதில் மகாதேவரான சிவபெருமானை வழிபடும் பொருட்டு 108 சிவா லயங்களை அமைத்தார்.

அவை பரசுராமப் பிரதிஷ்டா லிங்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

அத்துடன் காவல் தெய்வங்களாக அனேக பகவதி ஆலயங்களையும் அமைத்தார்.

மேற்குமலைத் தொடருக்கும், அரபிக்கடலுக்கும் (மகோதை) நடுவில் அமைந்த அந்த நாடு பரசுராம சேத்திரம் என்று பெயர் பெற்றது.

அது வடக்கே கோகர்ணம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை விரிந்து செழிப்புடன் உள்ளது.

அவருக்குப் பின்னும் விபீஷணன் முதலானவர்கள் அங்கு வந்து பரசுராமரை வழிபட்டதுடன், மகாதேவர் ஆலயங்களை அமைத்தனர்.

பரசுராம சேத்திரமே தமிழில், கேரளம் என்று அழைக்கப்படுகிறது.

கேரளோற்பத்தி என்னும் நூல், கேரளம் உருவான கதையை விரிவாகக் கூறுகிறது.

கேரளாவில் 108 தலங்களில் உள்ள 108 சிவாலயங்களான மகாதேவர் ஆலயங்களை அன்பர்கள் தேடிச் சென்று வழிபடுகின்றனர்.

இவை ஸ்ரீமத் தட்சண கைலாசம் எனப்படும் திருச்சூர், திருச்சிவப்பேரூர் வடக்கு நாதர் கோயில் தொடங்கி, சீரக்களம் மகாதேவர் வரை 108 ஆகும்.

e-magazine
aanmeegamalar.com





# உலகத்தை ஆளும் இரண்டு ராஜாக்கள்

# திருவாரூர் தியாகராஜர் தில்லை நடராஜர்

சைவ சமயப் பேருலகின் இரண்டு ராஜாக்களான நடராஜர், தியாகராஜர் இருவருக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பார்ப்போம்.

### திருவாரூர் திருக்கோயில்

இருவரும் ஆதிரை நாளில் விழா காண்பவர்கள். திருவாரூரில் நடைபெற்ற திருவாதிரை விழாவின் சிறப்பை அப்பர் அடிகள் பதிகமாகவே பாடியுள்ளார். தில்லை நடராஜர் திருவாதிரைக்கு முன்பு, தேர் ஏறி வலம் வந்து அலங்கார அபிஷேகம் கண்டு சபைக்கு எழுந்தருள்கிறார்.

**தேர் ஊர்ந்த செல்வன்:** இந்த இருவருமே தேரில் மட்டும் வலம் வருபவர்கள். அதன் பிறகு இருவருக்கும் பெரிய அளவில் சாந்தி அபிஷேகம் நடைபெறுகிறது.

**கூத்து உகந்தான்:** நடராஜரின் நடனம்: ஆனந்தத் தாண்டவம்.

**தியாகராஜரின் நடனம்:** அஜபா நடனம்.

**ஆறு அபிஷேகங்கள்:** இந்த இருவருக்கும் ஆண்டுக்கு ஆறு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.





**ரகசியம்:** தில்லைக் கூத்தரின் வலப்புறம் தனியாக ஒரு சுவரில் ஆகாச யந்திரம் அமைந்துள்ளது. இது 'சிதம்பர ரகசியம்' என்று போற்றப்படுகிறது.

திருவாரூரில், பெருமானின் திருமேனியே ரகசியமாகப் போற்றப்படுகிறது. இது 'சோம குல ரகசியம்' எனப்படுகிறது.

**பூங்கோயிலும், பொற்கோயிலும்:**

தியாகராஜருக்கு உரியது பூங்கோயில்என்றால், தில்லைக் கூத்தனுக்கு உரியது பொற்கோயில்.

**திருச்சாலகம் (ஜன்னல்):** தில்லையில் 96 கண்களைக் கொண்ட வெள்ளியால் போர்த்தப் பெற்ற ஜன்னல் உள்ளது. திருவாரூரில், 'திருச்சாலகம்' எனும் தென்றல் தவழும் ஜன்னல் உள்ளது.

ஆன்மிகமலர்

**செங்கழுநீர் தாமம்:**

இருவருமே செங்கழுநீர் மாலைகளை விரும்பி அணிவதால் செங்கழுநீர் தாமத்தார் என்று சிறப்பிக்கப்படுகின்றனர்.

**ஆயிரங்கால் மண்டபம்:**

இரு இடங்களிலும் ஆயிரங்கால்மண்டபங்கள் உள்ளன.

**மண்ணாகி விண்ணாகி:**

தில்லைப் பெருமான் ஆகாய வடிவானவர். திருவாரூர்ப் பெருமான் பூமி வடிவினர். இந்த இருவருமே மண்ணாகி, விண்ணாகி அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

**திருமூலட்டானம்:**

தில்லையிலும் திருவாரூரிலும் மூலலிங்கத்துக்கு மூலட்டானேஸ்வரர் என்றே பெயர்.

**பாத தரிசனம்:**

இரு இடங்களிலுமே பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகிய இருவரும் பாத தரிசனம் கண்டுள்ளனர். தில்லையிலே பெருமானின் 'அதிர வீசிஆடத் தூக்கிய' இடப் பாத தரிசனம் கண்டு மகிழ்ந்து, மார்கழித் திருவாதிரை நாளில் பேறு பெற்றனர்.

பின்னர் இருவரும் திருவாரூர் வந்து, இறைவனின் 'இருந்தாடும்கூத்து' கண்டு பங்குனி உத்திர நாளில் வலப் பாத தரிசனம் பெற்றனர்.

## சிதம்பரம் திருக்கோயில்:

**இரு பெருந்தேவியர்:**

திருவாரூரில் கமலாம்பிகை, நீலோற்பலாம்பிகை என இரு பெருந்தேவியர். தில்லையில் சிவகாமி, மூலட்டானநாயகி என இரு தேவியர்.

**அடியெடுத்துக் கொடுத்தவர்கள்:**

இரு ராஜாக்களுமே அடியவர்கள் பாட அடியெடுத்துக் கொடுத்தவர்கள். திருவாரூர் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு, 'தில்லை வாழ் அந்தணர்' என்று அடி யெடுத்துக் கொடுத் தார். பெரிய புராணம் பாட, 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார் தில்லைப் பெருமான்.



திருவாரூர் பெருமான், 'தில்லை' என்ற முத லடியைக் கொடுத்து சிதம்பரத்தை நினைவு படுத்துகிறார். தில்லைக் கூத்தனோ, உலகம் என்று அடியெடுத்து 'மண் தத்துவமான' திருவாரூரை நினைவு படுத்துகிறார்.

உ

அருள்மிகு ஞான தண்டாயுதபாணி துணை



நாள்: விசுவாவசு வருடம் மாசி மாதம் 22ம் நாள்
**06.03.2026**

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மேல் 10.00 மணிக்குள்

கரூர் மாவட்டம், மேலப்பாளையம் கிராமம்,
S.R.M. திருமண மண்டபம் கிழக்கில் மாருதி நகரில் அமைந்துள்ள

# ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம்
## அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில்

# மஹா கும்பாபிஷேகம்

வேத சிவாகம திருமுறைப்படி நடைபெற உள்ளது. ஆன்மிக அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி அருள் பெற்று பதினாறு செல்வங்களையும் பெற அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் பல்லாண்டு பல்லாண்டு காலம் நலமுடன் வாழ அனைவரையும் வருக வருக என அண்புடன் அழைக்கிறோம்.

மார்ச் 04–ந் தேதி புதன்கிழமை மதியம், இரவு 5–ந்தேதி வியாழக்கிழமை காலை, மதியம், இரவு 06–ந் தேதி வெள்ளிக்கிழமை காலை அன்னதானம் நடைபெறுகிறது.



இங்ஙனம்

## ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம்

அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம்
7262-A1, மாருதி நகர், 1-வது கிராஸ், SRM திருமண மண்டபம் கிழக்கில், மேலப்பாளையம், சணப்பிரட்டி, கரூர் - 639 004.
ஸ்தாபகர் & நிறுவன தலைவர். மடாதிபதி தவத்திரு.
**சாந்தானந்த குமர குருபர சுவாமிகள்**
இளையபட்டம் பிரம்ம ஸ்ரீ தவத்திரு.
**Dr. லோகானந்த குமர குருபர சுவாமிகள்**
Mobile : 9080410861, 9095941903



# சிவனும் சிவாலய அற்புத செய்திகளும்



- சிவன் என்ற சொல்லுக்கு மங்கலம், இன்பம் என்று பொருள். எனவே சிவராத்திரி ஒளிமய மான இரவு இன்பம் தருகின்ற இரவு என்று அழைக்கப்படுகிறது.
- சிவராத்திரி அன்று விரதம் இருந்து, கண் விழித்து சிவபூஜை செய்ய வேண்டும். தூய ஆடைகளை அணிந்து கொண்டு, திருநீறு பூசிக்கொண்டு சிவனை தியானம் செய்ய வேண்டும் சிவனுக்குரிய மந்திரங்களைக் கூறி வழிபட வேண்டும்.
- சிவராத்திரி விரதம் இருந்து, நமசிவாய என்ற மந்திரத்தை இரவு முழுவதும் உச்சரித்தால் மகத்தான பலன்கள் கிடைக்கும்.
- வாழ்வில் செல்வம், வெற்றி ஆகியவற்றை பெற விரும்புவோர் அவசியம் சிவராத்திரி விரதம் இருக்க வேண்டும்.
- சிவாலயத்தில் பலி பீடத்துக்கு அருகில்தான் நமஸ்கரிக்க வேண்டும்.
- 3,5,7,9 என்ற எண்ணிக்கைகளில் ஏதாவது ஒரு எண்ணிக்கையில் நமஸ்காரம் மேற் கொள்ளலாம்.
- ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும்.
- கிழக்கு நோக்கிய சந்நிதியானால் பலிபீடத் திற்குத் தென்கிழக்கு மூலையில் தலை வைத்து வணங்க வேண்டும்.
- கோவிலில் வடதுபுறம், கிழக்குப்புறம் கால் நீட்டக் கூடாது.
- தெற்கு, மேற்கு நோக்கிய சந்நிதிகளில் பலி பீடத்திற்கு தென்மேற்கு மூலையில் தலை வைத்து வணங்க வேண்டும்.
- வடக்கு நோக்கிய சந்நிதியானால் பலி பீடத்திற்கு வடமேற்கு மூலையில் தலை வைத்து வணங்க வேண்டும்.

ஆன்மிகமலர் .காம்

- சூரிய கிரகணத்தின் போதும், பொங்கல் தினத்தன்றும் மேற்கே கால் நீட்டி வணங்கக் கூடாது.
- சிவாலயத்துக்குள் எப்போதும் திரியாங்க நமஸ்காரம் (இருகரங்களையும் சிரம் மேல் குவித்து) செய்ய வேண்டும்.
- பிராகாரத்தில் பிரதட்சணம் செய்யும்பொழுது மிகவும் நிதானமாகச் செய்ய வேண்டும்.
- உட்பிராகார பிரதட்சணத்தைவிட வெளிப் பிராகார பிரதட்சணமே மிகவும் சிறந்தது.
- ஆலயத்தில் குறைந்தது மும்முறை கொடி மரத்துக்கு அருகே வணங்க வேண்டும். மும்முறை வலம் வரவேண்டும்.
- அபிஷேக காலத்தில் பிரதட்சணம் செய்யக் கூடாது. கொடிமரத்தையும் சேர்த்து பிரதட்


ஆன்மிகமலர்
மெயில் புக்
இதுவரை வெளிவந்த
அனைத்து இதழ்களையும்
எந்தவித கட்டணமின்றி
முற்றிலும் இலவசமாக
படித்து பயன்பெற
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்

சணம் செய்ய வேண்டும்.

- ஆலயத்தை விட்டு வெளிவரும்போது கொடிமரத்துக்கு அருகில் வணங்க வேண்டும். ஆலயத்துக்குள் எந்த சந்நிதியிலும் வணங்கக்கூடாது.
- பிரதட்சணத்தின் போது தலை பூமியை நோக்கி குனிந் திருக்க வேண்டும். நிலம் அதிர நடக்கக் கூடாது. பிறருடன் பேசிக் கொண்டு பிரதட்சணம் செய்ய கூடாது.
- இறைவன், இறைவிக்கு அபிஷேகம் நடக்கும் பொழுது பிரதட்சண நமஸ்காரங்களைத் தவிர்க்க வேண்டும். ஆலயத்தில் ஆண்டவனைத் தவிர வேறு எவரையும் வணங்கக்கூடாது.
- ஆலயத்தில் நெய்விளக்கு ஏற்றினால் நினைத்தது நடக் கும். நல்லெண்ணைய் ஆரோக்கியத்தை அளிக்கும்.
- தேங்காய் எண்ணை வசீகரத்தை அளிக்கும். இலுப்ப எண்ணை சகல காரியங்களிலும் வெற்றியைத் தரும். மறு ஜென்மத்திலும் நன்மை அளிக்கும்.
- திருமணமாகி 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் குழந் தை இல்லாமல் இருப்பவர்கள் ஸ்ரீதட்சணாமூர்த்தி அஷ்டகத்தை வியாழக்கிழமைகளில் மாலை 5 மணி முதல் 7 மணி வரை ஒன்பது தடவை பாராயணம் செய் தால் பலன் கிடைக்கும்.
- பூவும், நீரும் சிறந்த சிவபுண்ணியம். செல்வமும், அமைதியும் பெற மகேசனை பூவும், நீரும் கொண்டு வழிபட வேண்டும்.
- சிவனின் திருமேனியில் சந்தனக்காப்புப் பொருத்திக் குளிர்வித்தால் உலகில் உள்ள எல்லா உயிர்களையும் குளிர்விப்பது போல் ஆகும்.
- கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற் பூரம் முதலான நறுமணப் பொருள்கள் கலந்து இறைவனுக்கு ஒரு முறை சந்தனக் காப்பு செய்தவர்கள் தேவ வருடத்தில் கோடி வருடம் சிவலோகத்தில் இன் புற்றிருப்பார்கள்.
- உமா தேவியுடன் இணைந்த சிவபிரானை பூஜிக் கின்றவர்கள் பிறவிப்பயனை அடைந்தவர்கள். அவர்கள் பேரின்பத்தை அடைகிறார்கள் என்று சிவானந்தலஹரி கூறுகிறது.
- சிவாலய வழிபாடு செய்யும் போது லிங்கத்திற்கு வலப்புறம் இருந்து பணிய வேண்டும்.
- பங்குனி உத்திரம் சிவனுக்கு மிகவும் சிறந்த தினமாகும்.
- சிவபெருமானுக்குரிய திருப்பணிகள் எதுவாக இருந்தாலும் அவை அனைத்தும் குற்ற மற்ற நல்ல அறமே ஆகும்.
- சிவன் விரும்பி அணிபவை வெள்ளை எருக்கம் பூ, அருகம்புல், ஊமத்தை, வெண்ணீறு ஆகியவையாகும்.
- சிவன் கையில் ஏந்தி இருப்பவை சூலம், மான், மழு, துடி, அக்னி.
- சிவனுக்கு ஆடை தோல். சிவனுக்கு வாகனம் காளை. ஆபரணம் பாம்பும், எலும்பும். மாலை மண்டை ஓடுகள், பன்றிக் கொம்பு, பிட்சை பாத்திரம்.
- சிவனுக்குப் புஷ்பாஞ்சலி செய் யும்பொழுது எல்லாப் புஷ்பமும் கலந்து செய்யலாம்.
- புஷ்பபலன் என்னும் நூல் ஒரு கொன்றை மலரை சிவனுக்கு சாத்துபவர் சாலோக பதவியையும், இருமலர்கள் சாத்துபவர் சாமீப பதவியையும், மூன்று மலர்கள் சாத்துபவர் சாரூப பதவியையும், நான்கு மலர் களைச் சாத்துபவர் சாயுஜ்ய பதவியையும் அடைவர் என்று கூறுகிறது.



## முறையாக பரிகாரம் செய்தால் சர்ப்ப சாந்தி பலனை தரும்

# காளஹஸ்திரி ஈஸ்வரன்



திருப்பதியில் இருந்து 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது ஸ்ரீ காளஹஸ்தி திருக்கோயில் இங்கு, ராகு, கேது தோஷம் காரணமாக, திரு மணம் தடைப்பட்டவர்கள், குழந்தைப்பேறு இல்லாத தம்பதியினர் நாகப் பிரதிஷ்டை பூஜை செய்வது வழக்கம். இதைச் செய்வதால், நீண்ட காலமாக தடைப்பட்டு வரும் திருமணம் உடனடி யாக நடந்தேறும் என்பது இந்து மக்களின் நம்பிக் கையாகும்.

காளஹஸ்தியில் முறையாக #சர்ப்ப #சாந்தி செய்யும் முறை:

ஆன்மிகமலர் .காம்

காளஹஸ்திக்குச் செல்லும் முன் திருப்பதிக்குச் சென்று ஸ்ரீ வேங்கடாசலபதியை வழிபட்டு வணங்கி விட்டுப் பின் காளஹஸ்திக்கு திரும்ப வேண்டும். அங்கு வந்து 2 வெள்ளி நாகங்கள் வாங்க வேண்டும். இது கோயிலுக்கு முன்புறம் விற்கப்படும். ஒரு கறுப்பு நாகம். ஒரு வெள்ளை நாகம் என இரு நாகங்கள் வாங்க வேண்டும்.

ஆறு, கருப்பு ரவிக்கை துண்டு(பிளவுஸ்), ஆறு, சிவப்பு ரவிக்கை துண்டு வாங்க வேண் டும், ஆறு புளியோதரை, ஆறு தயிர் சாதம் வாங்கிக் கொள்ள வேண்டும். பின் தேங்காய், பழம், புஷ்பம், கற்பூரம், ஊதுபத்தி இவைகளை வாங்கிக் கொண்டு பணம் கட்டி அர்ச்சனை டிக்கெட் பெற்றுக் கொண்டு கோயிலினுள் செல்ல வேண்டும்.

கோயிலினுள் சென்று ஸ்ரீ காளஹஸ்தி



நாதர் இருக்கும் சன்னதிக்கு எதிரில் பரிகார பூஜை செய்யும் இடத்திற்குச் செல்ல வேண்டும். பின்னர் அருகில் இருக்கும் புரோகிதரிடம் இரு நாகங்களையும், பூஜைப் பொருட்களையும் கொடுக்க வேண்டும்.

அங்குப் புரோகிதர் உங்களை அமரச் செய்து கையில் இரு நாகங் களையும் வைத்து குறைந்த பட்சம் ஒரு மணி நேரம் சர்ப்ப சாந்திக்கான ஸ்லோகங்களை சொல்வார். அதை காதில் வாங்கி அவர் சொல்ல சொல்ல நாம் பரிகார ஸ்லோகங்களையும், பூஜைகளையும் செய்ய வேண்டும்.

கடைசியாக அந்த நாகங்களை கையில் எடுத்துக்கொண்டு ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர சுவாமி சன்னதிக்கு வந்து சிவபெருமானை தரிசனம் செய்துவிட்டு, அங்குள்ள #உண்டியலில் இரண்டு நாகங்களையும் தலையை சுற்றிப் போட வேண்டும்.

பின்பு ஞானப்பிரசுன்னாம்பிகையை தரிசனம் செய்துவிட்டு வெளியேற வேண்டும்.

அங்கிருந்து வெளியே வந்து ரவிக்கைத் துணிகளை சுமங்கலிப் பெண்களுக்கு தானம் செய்ய வேண்டும்.

பின்பு 12 தயிர், புளியோதரை சாதப் பொட்டலங்களையும் அங்குக் கோயிலின் முன் வீற்றிருக்கும் ஊனமுற்றோர்களுக்குத் தானமாக கொடுக்க வேண்டும்.

ஆன்மிகமலர்

அன்றையதினம் அங்கு தங்கவேண்டும், கோவிலில் தங்க இயலாதவர்கள் கோவிலைச் சுற்றியுள்ள ஏதாவது தங்கும் விடுதியில் தங்கி விட்டு காலையில் எழுந்து மறுபடியும் காளஹஸ்தி நாதர் கோயில் இருக்கும் திசையை நோக்கி வணங்கிவிட்டு ஊர் திரும்ப வேண்டும்.

இதுவே முறையான சர்ப்ப சாந்தி செய்யும் முறையாகும். இது நடைமுறையில் நல்ல பலனை அளிக்கிறது.



இதுவரை வெளிவந்த

# 195 க்கும் மேற்பட்ட இதழ்களை

eBook DOWNLOAD free

aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்




Scan to Read
aanmeegamalar
e-book

# ஆன்மிக மலர் 2026 காலண்டர் ஆன்மிக மலர் சிறப்பிதழ்கள் சிறப்பாக வெளியிடப்பட்டது









ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாசகர்களை கொண்ட ஆன்மிக மலர்.காம் சார்பில் வெளி யிடப்பட்ட 2026 ஆம் ஆண்டு ஆன்மிக காலண்டர் மிகுந்த வரவேற்பை பெற்றது.

பிள்ளையார்பட்டி சிவநெறி கழகம் நிறுவனர் சிவ திரு பிச்சைக்குருக்கள்அவர்கள் வெளி யிட்டார். தெளிச்சாத்த நல்லூர் ஸ்தபதி சண்முகம் பெற்று கொண்டார்.

இதேபோல் ஜனவரி 1 புத்தாண்டு தினத்தன்று வெளிவந்த திரு உத்தரகோசமங்கை ஆருத்ரா தரிசன சிறப்பிதழை குன்றக்குடி அடிகளார் அவர்கள் வெளியிட்டார்.

இதேபோல் மதுரை ஏஆர் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அனை வருக்கும் இளங்கோவடிகள் முத்தமிழ் மன்றம் சார்பில் அதன் நிறுவனர் முதன்மை பேராசிரியர் முனைவர் புலவர் சங்கரலிங்கனார் வழங்கினார். இதேபோல் ராமநாதபுரம் அரண்மனை முன்பு உள்ள மணி நாட்டு மருந்து கடையில் வாடிக்கையாளர் கள் அனைவருக்கும் திரு உத்தரகோசமங்கை



ஆரூத்ரா தரிசன சிறப்பிதழ் வழங்கப்பட்டது. இதுதவிர திரு உத்தரகோசமங்கை ஆரூத்ரா தரிசன விழாவில் கலந்து கொண்ட பக்த்தர்கள் அனைவருக்கும் ராமநாதபுரம் ஆன்மிக மலர் முகவர் பிரசன்னா ஆன்மிக மலர் காலண்டர் மற்றும் சிறப்பிதழ் களை வழங்கினார்.

14.1.2026 போகிதிருநாள் அன்று வெளியான மானாமதுரை ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் நிறுவனர் ஸ்ரீ ல ஸ்ரீ ஞான சேகர ஸ்வாமிகள் குருபூஜை சிறப்பு மலரை திருக்கழுக்குன்றம் திருவாசக சித்தர் கயிலை புனிதர் சிவ தாமோதரன் ஐயா வெளியிட்டார்.

பிப்ரவரி 1.2.2026 அன்று வெளியான பழனி தண்டாயுதபாணி தைப்பூசம் சிறப்பிதழ் புத்தகம் பழனி மலை அடிவாரம், கணக்கன் பட்டி சற்குரு பீடம்,

ஆன்மிகமலர்

செம்பு முருகன் கோவில், தாடிக்கொம்பு அருள்மிகு ஸ்ரீ சௌந்தரராஜ பெருமாள் கோவில் மற்றும் மானாமதுரை ஸ்ரீ சுந்தர விநாயகர் கோவில் பரமக்குடி அருள்மிகு ஸ்ரீ முத்தாரம்மன் கோவில் ஆகிய இடங்களில் பக்தர்கள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது.

# சிவன் கோயில்களில் நடைபெறும் அற்புதங்கள்

## திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலின் தெப்பக் குளத்தில் பன்னிரண்டு ஆண்டுக்குக்கொருமுறை கடலின் ஆழ்கடலில் காணும் சங்கு உற்பத்தியாகி வெளி வருகிறது.

இவற்றை சிவாச்சாரியார்கள் சேகரித்து மக்கள்பார்வைக்கு வைத்துள்ளனர். இங்குள்ள மலையில் வீற்றிருக்கும் இறைவனுக்கு அபிஷேகம் நடக்கும்போது கழுகு வட்டமிடும்.

## கர்னாடகா சிவகங்கை

தமிழநாட்டின் சிவகங்கையைப் போல் கர்னாடகாவிலும் ஒரு சிவகங்கை உண்டு.

பாங்களூரிலிருந்து 50 கிமீட்டர் தொலைவில் உள்ளது. இது குன்றோடு கூடிய ரம்மியமான இடம். இக்குன்றில் கங்காதீஸ்வரர் ஆலயம் உள் ளது. இக்குன்றில் மகர சங்கராந்தியின் போது ஒரு அதிசயம் நடக்கும்.

இந்தகுன்றிலுள்ள பள்ளத்தில் கடும் வெயில் அடித்தாலும் மகர சங்கராந்தி அன்று மாலைக்குள் மழை பொழிந்து இப்பள்ளம் நிறைந்துவிடும். இந்நீரை கங்கை தீர்த்தமாக கருதி இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற்கும், தங்க ளின் உடலில் தெளித்துக் கொள்கின்றனர்.

மேலும் இவ்விறைவன் சிவலிங்கத்திற்குச் செய்யும் நெய் அபிசேகத்தின்போது நெய் வெண் ணையாக மாறும் அற்புதம் காணலாம்.

## 3 நிறம்மாறும் மீனாட்சி

சிவகங்கைமாவட்டம் திருபுவனம்அருகேயுள்ள கல்லுமடை நாகேசுரமுடையார் இரண்டாயிரம் வருடம் முந்தைய கோயிலின் மீனாட்சிவிக்கிரகம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை பச்சை, மஞ் சள், ஊதா ஆகிய நிறங்களில் நிறம் மாறும்.

ஆன்மிகமலர்


## பன்னீர் தெளிக்கும் மரம்

திருநெல்வேலி ஆழ்வார்குறிச்சி மேற்கே ஐந்து கிமீ தொலைவில் அத்ரிமலைக்கோயில் அத்ரி பரமேஸ்வரர் என போற்றப்படுகிறார்.

இங்கே நீண்டு உயர்ந்து கம்பீரமாக வளர்ந்த அம்ருத வர்ஷிணி மரத்தின் எல்லா கிளைகளிலும் சித்திரை மாதம் முழுவதும் பன்னீர் துளிகளாக தெளிக்கப்படும் அற்புத நிகழ்வு நிகழ்கிறது.

## தலக்காடு பாதாளேஸ்வரர்

மைசூரிலிருந்து 45கிமீ தொலைவில் காவிரி ஆற்றின் இடதுகரையில் தலக்காடு பாதாளே ஸ்வரர் ஆலயம் தரைப் பகுதியிலுருந்து



e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர்

20அடிஆழத்தில் உள்ளது.

இந்த பாதாளேஷவரர் காலையில் சிவப்பு நிறமாகவும், பிற்பகலில் கறுப்பு நிறமாகவும் மாலையில் வெள்ளை நிறமாகவும் தினமும் மும்முறை நிறம் மாறி அருள் பாலிப்பது அற்புதமே.

## ஒளிவீசும் சிவலிங்கம்

நரிக்குடி ஊராட்சி ஒன்றியம் கல்லுமடை என்னும் கிராமத்தில் அமைந்துள்ள இரண்டா யிரம் வருடம் முந்தைய திரு நாகேசுவர உடையார் கோயிலின் மூலவர் சிவலிங்கத்திலிருந்து அமாவாசை, பவுர்ணமி நாட்களில் இரண்டு கண் களிலிருந்தும் ஒளி வீசும்.

இங்குள்ள அம்மன் சிலை இரண்டு மாதத் திற்கு ஒருமுறை தானாகவே நிறம் மாறி பச்சை, மஞ்சள், ஊதா 7 நிறங்களில் காட்சியளிக்கிறது.

## பஞ்சவர்ணேஸ்வரர்

கும்பகோணதத்திலிருந்து மூன்று கிமீட்டர் தொலைவிலுள்ள திருநல்லூர் மூலவர் கல் யாண சுந்தரேஷ்வரர் காலை ஆறுமணியி லிருந்து எட்டரை மணிவரை செப்புநிறமாகவும், காலை எட்டரை மணியிலிருந்து பத்தரை மணிவரை இளம் சிவப்பு நிறமாகவும், பத்தரை மணியிலிருந்து ஒருமணிவரை பொன் நிறமாகவும், ஒரு மணிக்கு மேல் மூன்றரை மணிவரை மரகதப்பச்சை நிறமாகவும்

இதற்குபின் சூரியன் மறையும் வரை இனம் காண முடியாத பற்பல நிறங்களில் பக்தர்களுக்கு காட்சிக்கொடுத்து பரவசப்படுத்துகிறார்.

## குனுப்புடி சோமேஷ்வரர்

ஆந்திராவின் அமரராமம், ஸீரராமம், திரட்சாராமம், சோமராமம், குமாரராமம் என்ற ஐந்து தலங்களையும் இராம சேத்திரங்கள் என்கின்றனர். இவற்றில் சோம ராமம் கோதாவரி குனுப்படி என்ற கிராமத்தில் உள்ளது.

இக்கோயிலின் மூலவர் தேய்பிறை தினங்களில் நிறம் மங்கியும், அமாவாசையன்று கோதுமை நிறமாகவும், வளர்பிறை நாட்களில் சறிது சிறிதாக மாறி பவுர்ணமியன்று முழுவெண்மை நிறமாக அருள் பாலிப்பது ஆச்சரியம் ஆகும்.

## பாறைக்குள் நீரூற்று

மதுரை மாவட்டம் பேறையூரில் உள்ள மொட் டைமலையின் மல்லிகார்ஜுன் என்ற சிவன் கோயிலின் அடிவாரத்தில் வற்றா நீரூற்று உள்ளது.

ஆயிரம் அடி உயர கருங்கல் மலையிலிருந்து இந்த சுனைக்கு எப்படி நீர் வருகிறது என்பது இயலாத அதிசயமாக உள்ளது.

## கேரளபுரம் விநாயகர்

கன்னியாகுமரி மாவட்டம் பத்மனாபபுரம் அருகிலுள்ள வினாயகபெருமான் ஆறுமாதங்கள் வெண்மைநிறமாகவும் ( ஆவணிமுதல் தைமுடிய), பின் மாசிமுதல் ஆடி வரை கறுப்பு நிறமாகவும் நிறம்மாறி அருள் பாலிக்கிறார்.



e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 185 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# சிவராத்திரி ஓட்டம்

## உருவான வரலாறும் 12 கோவில்களும்



e-magazine
aanmeegamalar.com

கன்னியாகுமரி மாவட்ட ஆலய விழாக்களில் எத்தனையோ சிறப்புகள். அவற்றில் குறிப்பிடத் தக்கது, சிவாலய ஓட்டம்.

மகாசிவ ராத்திரி அன்று பன்னிரண்டு சிவாலயங்களை ஓட்டமாக ஓடிச் சென்றே தரி சிப்பதுதான் இந்த வழிபாட்டின் தனிச் சிறப்பு.

அதாவது 24 மணி நேரத்தில், சுமார் 80 கி.மீ. தொலைவுக்குட்பட்ட பன்னிரண்டு சிவாலயங் களை தரிசிப்பது.

இந்தக் கோயில்கள் அனைத்தையும்உரிய நேரத்தில் தரிசிக்க வேண்டிய காலம் கருதியே ஓட் டம்! இந்த சிவாலய ஓட்டம் எப்படி ஆரம்பித்தது?

புருடாமிருகம் பாதி மனித உருவம், மீதி புலி உருவமாக அமைந்த ஒரு பிறவி.

ஆழ்ந்த சிவபக்தர். சிவனைத் தவிர, வேறு இறைவனை ஏற்கமாட்டார். விஷ்ணு நாமம், இவருக்குக் கேட்க சகிக்காது!

ஆனால் ஹரியும் ஹரனும் ஒன்றே என்ற தத்துவத்தை அவருக்கு உணர்த்த விரும்பினார் பகவான் கிருஷ்ணன். அவர் பஞ்ச பாண்டவர்களில் ஒருவனான பீமனை அழைத்தார்.

நடைபெறவிருக்கும் குருக்ஷேத்திர யுத்தத்தில் பாண்டவர்கள் வெற்றி பெற வேண்டுமானால், அந்த புருடா மிருகத்தின் உதவியும் தேவைப் படுகிறது. ஆகவே, அதனை சந்தித்து அதன் உதவியைக் கோரி வருமாறு அவர் பீமனை அனுப்பி வைத்தார்.

கூடவே, அவனிடம் 12 ருத்ராட்சங்களைத் தந்து, தன்னுடைய கோவிந்தா, கோபாலா என்ற பெயர்களை உச்சரித்தவாறே புருடா மிருகத்தை நெருங்குமாறும் சொன்னார்.

‘‘என் பெயரைக் கேட்க விரும்பாத புருடா

மிருகம், உன் மீது பாயும். நீ உடனே ஒரு ருத்ராட்சத்தை அந்த இடத்தில் போட்டுவிடு.

அது ஒரு சிவலிங்கமாக மாறிவிடும். அதனைக் காணும் புருடா மிருகம், அந்த லிங்கத்துக்கு உரிய வழிபாட்டினை செய்த பிறகுதான் மறுவேலை பார்க்கும். அங்கிருந்து நீ ஓடிவிடு.

பிறகு அது உன்னைத் துரத்தி வரும். அடுத்த இடத்தில் இன்னொரு ருத்திராட்சத்தைப் போடு. இதுவும் லிங்கமாக மாறும். புருடா மிருகமும் பூஜை செய்யத் தொடங்கி விடும்.

இப்படி பன்னிரண்டு இடங்களுக்கு ஓடி, ஓடி அதனை அலைக்கழித்தால் பன்னிரண்டாவது ருத்திராட்சம் விழும் இடத்தில் நான், பரமேஸ்வரனு டன் உங்கள் இருவருக்கும் காட்சி தருவேன்'' என்று விளக்கி, பீமன் நடந்துகொள்ள வேண்டிய முறையைச் சொன்னார்.

பீமனும் அவ்வாறே செய்தான்.

அப்படி முதல் ருத்திராட்சம் விழுந்த இடம்தான் திருமலை.

பன்னிரண்டாவது விழுந்த இடம் நட்டாலம்.

நட்டாலத்தில் ஹரியும் ஹரனும் இணைந்த சங்கரநாராயணராக மகாவிஷ்ணு காட்சி தந்து, சிவனும் விஷ்ணுவும் ஒன்று என்று புருடா மிருகத்துக்கு மட்டுமல்ல, உலகுக்கே உணர்த் தினார்.

புருடா மிருகத்தின் உதவியும் குருக்ஷேத்திர யுத்தத்திற்குக் கிடைத்தது. இப்படி கர்ண பரம் பரையாகச் சொல்லப்படும் கதையை ஒவ்வொரு மகாசிவராத்திரி அன்றும் ஒரு குழுவினர் பீமனு டைய பிரதிநிதியாக ஓடி, ஓடிச் சென்று அந்த சிவாலயங்களைத் தொழுகிறார்கள்.

இந்த சிவாலய ஓட்டத்தில் பங்குபெறுபவர்கள் மாசி மாதம் ஏகாதசி அன்று மாலை அணிந்து விரதம் மேற்கொள்வர்.

சிவராத்திரிக்கு முதல் நாள் மாலை 4 மணி அளவில் காவி வேட்டியும் காவித்துண்டும் அணிந்து சிறிய பையில் விபூதி எடுத்துக்கொண்டு வழியில் ஏற்படக்கூடிய செலவுகளுக்காக கொஞ்சம் பணமும் எடுத்துக்கொள்வர்.

முதற்கோயிலான முஞ்சிறை என்ற திருமலையில், ஆற்றில் நீராடி, ஈசனை வணங்கிவிட்டு ஓட ஆரம்பிப்பர்.

இப்போதிலிருந்து பன்னிரண்டாவது கோயி லில் தரிசனம் முடிக்கும்வரை ''கோவிந்தா,கோபாலா'' என்ற கோஷத்தை ஒலித்தபடியே இருப்பார்கள்.

நிறைவாக மும்மூர்த்திகளும் அருளும் சுசீந் திரம் கோயிலுக்குச் சென்று வழிபட்டு ஓட்டத்தை முடிக்கிறார்கள்.



இது ஒரு பக்தி செலுத்தும் முறை.

இதனால் என்ன பயன் கிட்டுகிறது என்ற எதிர்பார்ப்பைவிட வித்தியாசமாக ஏதாவது ஒரு முறையில் இறைவழிபாட்டை மேற்கொள்ளும் பக்தி உணர்வுதான் அவர்களிடம் நிறைந்திருக்கிறது. ஓடி ஓடிச் சென்று வழிபடப்படும் பன்னிரு சிவாலயங்கள் யாவை?

## 1. திருமலை

சிவாலய ஓட்டத்தினர், திருமலை எனும் திருத்தலத்தில் உள்ள ஈசனை முதலில் வழி படுகிறார்கள். விளவங்கோடு தாலுகாவில், குழித்துறைக்கு தெற்கே, ஆறு கி.மீ. தொலைவில் மலை உச்சியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது இக்கோயில். மூலவர், சூலபாணி என்று போற்றப்படுகிறார். இங் குள்ள கல்வெட்டு இவரை 'முஞ்சிறை திருமலைத்தேவர்' என்று அழைக்கிறது.

## 2. திக்குறிச்சி

தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள இத்தலம், இரண்டாவது வழிபாட்டுத் தலம். சிவாலயங்களில் முக்கியத்துவம் பெறும் நந்தி, இந்தக் கோயிலில் காணக் கிடைக்காது. ஒருவேளை ஓடி ஓடி வந்து

e-magazine
aanmeegamalar.com


1. திருமலை


2. திக்குறிச்சி


3. திற்பரப்பு


4. திருநந்திக்கரை


5. பொன்மனை

ஆன்மிகமலர்.காம்

சிவ தரிசனம் பெற விழையும் பக்தர்களுக்கும், தன் ஐயனுக்கும் இடையே தான் தடையாக இருக்க அது விரும்ப வில்லையோ! மூலவர், திக்குறிச்சி மகாதேவர். நாற்சதுரமண்டபக் கருவறையில் அருள்கிறார், இந்த ஈசன்.

## 3. திற்பரப்பு

முக்கண்ணனை தரிசிக்க ஓடும் ஓட்டத்தில் மூன்றாவது கோயில், திற்பரப்பு. மூலவர் உக்கிர மான தோற்றத்தோடு விளங்குவதால் ஜடாதரர் என்றும் வீர பத்திரர் என்றும் அழைக்கப்படுகிறார். மேற்கு நோக்கிய ஆலயத்தில் நந்திதேவர் வடக்கு நோக்கித் திரும்பி அமைந்துள்ளார். குழித்து றைக்கு வடகி ழக்கே சுமார் 14 கி.மீ. தொலைவில் கோதையாற்றின் கரையில் அமைந்துள்ளது, இத் தலம்.

## 4. திருநந்திக்கரை

திருநந்திக்கரை நான்காவதாக வரும் ஆலயம். சிவாலய ஓட்டத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களில் முதல் நபர் இந்த ஆலயத்திற்கு வரும் நேரத்தைக் கணக்கில் கொண்டே இங்கு நடைபெறும் பத்துநாள் உற்சவத்திற்கான கொடியேற்றம் நிகழ்கிறது. மூலவர், நந்திகேஸ்வரர். மார்த்தாண்டத்திலிருந்து 14 கி.மீ. தொலைவு.

## 5. பொன்மனை

குலசேகரத்திலிருந்து சுருளக்கோடு செல்லும் பாதையில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது பொன்மனை பரமன் ஆலயம். தீம்பிலேஸ்வரர் என அழைக் கப்படும் மூலவர், தீங்குகளை விரட்ட வல்லவர். முகப்பு மண்டபத்தில், நந்தி படுத்த நிலையில் காணப்படுவது வித்தியாசமானது. நந்தி மண்டபத்தின் மேற்கூரையில் புராண நிகழ்ச்சிகளையும், நவகிரகங்களையும் மரச் சிற்பங்களாகக் காணலாம்.

## 6. பன்னிப்பாக்கம்

ஆன்மிகமலர்.காம்

தக்கலைசுருளக்கோடு பாதையில் 6 கி.மீ. தொலைவில் உள்ள ஆறாவது சிவத்தலம் பன்னிப்பாக்கம். கிராத மூர்த்தியாக விளங்கும் இறைவன், தீராத வினைகளைத் தீர்த்து நற்கதி வழங்குகிறார். பைரவருக்கு இந்தக் கோயிலில் தனி சந்நதி அமைந்துள்ளது.

e-magazine
aanmeegamalar.com



6. பன்னிப்பாக்கம்



7. கல்குளம்



8. மேலாங்கோடு



9. திருவிடைக்கோடு

e-magazine
aanmeegamalar.com

## 7. கல்குளம்

ஏழாவதாக தரிசிக்கப்படும் இந்த ஆலயம் தனிச்சிறப்பு கொண்டது. ஓட்டத்தில் இடம்பெறும் 12 சிவாலயங்களில் இங்கு மட்டும்தான் இறைவிக்கு தனி சந்நதி அமைந்துள்ளது. இறைவன் நீலகண்ட சுவாமியாகத் திகழ்கிறார்; அம்பிகை ஆனந்த வல்லியாக அற்புதக் காட்சியருள்கிறாள். அன்னையின் தோற்றம் மதுரை மீனாட்சியை நினைவூட்டுகிறது. நாகர்கோவிலுக்கு வடமேற்கே சுமார் 14 கி.மீ. தொலைவில் உள்ளது, இத்தலம்.

## 8. மேலாங்கோடு

எட்டாவதாக, மேலாங்கோடு. இது, வேளிமலை என்ற பகுதிக்கு அருகில் உள்ளது. பசுமையான வயல்வெளிக்கு நடுவே அமைந்திருக்கும் இந்த ஆலயத்தில் ஈசன், காலகாலராக திருக்காட்சி நல்குகிறார். இத்தலத்தின் காவல் தெய்வமான இசக்கியம்மன், சிவாலயத்தின் அருகிலேயே செண்பகவல்லியாகவும் நீலாப்பிள்ளையாகவும் தனித்தனியே கோயில் கொண்டிருக்கிறாள்.

## 9. திருவிடைக்கோடு

பத்மனாபபுரத்தின் கிழக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது, திருவிடைக்கோடு. சிவாலய ஓட்டத்தில் ஒன்பதாவது ஆலயம். இடைக்காடர் எனும் சித்தரின் பெயரால் இத்தலம் அமைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். மூலவர், மகாதேவர் என்று வணங்கப்படுகிறார். இங்குள்ள கல்வெட்டுகள், இவரை 'கொடம்பீஸ்வரமுடைய நாயனார்' என்கிறது. கோயில் ஆவணங்களில், 'சடையப்பர்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்த ஈசனுக்குதான் எத்தனை பெயர்கள்!



10. திருவிதாங்கோடு



11. திருப்பன்றிக்கோடு



12. திருநட்டாலம்

e-magazine
aanmeegamalar.com

## 10. திருவிதாங்கோடு

பத்தாவது தரிசனத் தலம், திருவிதாங்கோடு. பரிதிபாணி என்றழைக்கப்படுகிறார் இந்தக்கோயில் ஈசன். தக்கலையின் தென்மேற்கே சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ள ஆலயம் இது. இதன் தென் பகுதியில் கேரள பாணியில் அமைந்த ஆலயத்தில், மகா விஷ்ணுவை தரிசிக்கலாம்.

## 11. திருப்பன்றிக்கோடு

திருப்பன்றிக்கோடு பக்தவத்சலர் ஆலயம், பதினோராவது திருத்தலமாக விளங்குகிறது. விஷ்ணு தலம்போல பெயர் அமைந்திருந்தாலும் பக்தர்கள் இத் தல இறைவனை, திருப்பன்றிக்கோடு மகாதேவர் என்றே அழைக்கின்றனர். நாகர் கோவிலில் இருந்து வட மேற்கில் சுமார் 20 கி.மீ. தொலைவில் உள் ளது இவ்வாலயம்.

## 12. திருநட்டாலம்

சிவாலய ஓட்டம் நிறைவு பெறும் தலம், திருநட்டாலம். நாகர்கோவிலில் இருந்து 25 கி.மீ. தொலைவு. இங்குள்ள குளத்தின் இரு புறங்களிலும் இரு ஆலயங்கள் உள்ளன. கிழக்கு நோக்கியுள்ள ஆலயத்தில் அர்த்தநாரீஸ்வரராக அருட்காட்சி வழங்குகிறார், ஈசன். எதிர்புறத்தில் உள்ள ஆலயத்தில், மகாவிஷ்ணு, சங்கரநாராயணராக அருள்கிறார்.

# மனித வாழ்க்கைக்கும்' வெளியுலக இயற்கைக்கும் சம்பந்தம் உண்டா?

சீடன்: நம் வளர்ச்சி எப்பொழுது தெரியும்?

ஞானி: காலத்தின் பெருமை தெரிந்தால் தான் வளர்ச்சியில் பெரு மை தெரியும்.

சீடன்: கடவுளின் ருசி மனிதனுக்கு எப்பொழுது புரியும்?

ஞானி: இறைவன் எல்லோரையும் ஒரேமாதிரி தான் பார்க்கிறான் என்பதை உணரும் போது.

சீடன்: கடவுள் பொதுவானவன் என்ற உணர்வு மட்டும் போதுமா?

ஞானி: போதாது. சொந்தமானவன் என்ற உணர்வு வேண்டும். அப்படிப்பட்ட உணர்வு வருவதற்கு தான் பிரதோஷ பூஜை முதலியவை ஏற்பட்டது.

சீடன்: பக்தன் இந்த பூஜைகளில் என்ன எண் ணுகிறான்?

ஞானி: ஆண்டவனை, கடவுளை இந்த பூஜை களில் பார்க்கிறான். இல்லாவிட்டால் கடவுளைப் பார்த்திருக்கும் குருநாதனை இந்த பூஜையில் பார்க்கிறான்.

சீடன்: மனிதனுக்கும், கடவுளுக்கும் என்ன வித்தியாசம்?

ஞானி: மறைந்து போன மனிதனை மீண்டும் காண முடியாது. மறைந்திருக்கும் கடவு ளை பக்தியினால் காணலாம்.

சீடன்: மனிதனுக்கும், பக்தனுக்கும் என்ன வித்தியாசம்?

ஞானி: பக்தனுக்கு கடன் வந்த தும் கடவுள் வந்துஅருளி யது போல் நமக்கும் வருவான் என்று எண்ணுபவன் மனி தன். கடன் வருவதுதான் மிஞ்சும்.

சீடன்: மனிதனுக்கும், ஞானிக்கும் என்ன வித்தியாசம்?

ஞானி: மனிதன் உயிருடன் இருக்கிறான். ஞானி வாழுகிறார். ஞானிகளின் வாழ்க் கை என்பது ஒரு எடுத்துக்காட்டு.

சீடன்: கடவுள், பக்தன், ஞானி என்ன பொது பொருத்தம்?

ஞானி: எல்லா உயிர்களையும் கடவுளாகக் கொண்டு குளிர்ந்த முகத்துடன் வர வேற்பார்கள்.

சீடன்: மும்மூர்த்திகளுக்கும், உலகிற்கும் என்ன சம்மந்தம்?

ஞானி: எலக்ட்ரான், ப்ரோடான், ந்யூட்ரான் என் பது எப்படி ஒவ்வொரு அணுவுக்கும்முக் கியமோ அது போலவே மும் மூர்த்தி களும்.

சீடன்: மனித வாழ்க்கைக்கும், வெளியுலக இயற்கைக்கும் சம்பந்தம் உண்டா?

ஞானி: உண்டு. இறைவன் படைத்தபிராணவாயு வினால் உயிர் வாழும் நீ என்றைக்காவது அதற்காக அவனை நினைத்த துண்டா? நன்றி செலுத்தியதுண்டா?

சீடன்: உலகத்தில் மனிதனுக்கு மனிதன் என்ன சம்பந்தம்?

ஞானி: சர்வம் பிரும்ம மயம் என்பதால் அனை வரும் ஒன்றே. கண்ணுக்கு அஞ்ஞானத் தால் வித்தியாசமாக தெரிவதே ஜாதி, மத, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வர்ணங்கள்.



சீடன்: வைகுண்டம் என்று ஒன்று உண்டா?

ஞானி: வைகுண்டம் என்பதே என் சொந்த கிராமம். சொந்த கிராமத்தை விரும்பாதவன் உண் டா என்கிறார்கள் பக்தர்கள்.

சீடன்: வளரும் மனிதன் எப்படி இருக்க வேண்டும்?

e-magazine
aanmeegamalar.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


ஞானி: பேசாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதே என்று எண்ணுபவனே வளரும் மனிதன்.

சீடன்: துன்பங்கள் ஏன் பிறந்தன?

ஞானி: ஆன்மீக இறக்கைகள் வளராததால்.

சீடன்: பூஜைகளை நிறுத்தலாமா?

ஞானி: பயம் போய்விட்டால் நிறுத்து.

சீடன்: தொண்டன் என்றால் என்ன?

ஞானி: பிறருக்காக வாழ்வது.

சீடன்: வீரம் என்றால் என்ன?

ஞானி: யாரையும் எதையும் யாசிக்காத நிலை.

சீடன்: ஞானஸ்நானம் என்றால் என்ன?

ஞானி: நமக்கு தேவையானது எது என்று தெரியும் நேரம்.

சீடன்: உண்மையான மதவாதிகள் ஏன் இல்லை?

ஞானி: பிரச்சினைகளில் கௌரவம் குறுக்கிடுவதை அனுமதிப்பதால்.

சீடன்: மனிதத் தன்மை என்றால் என்ன?

ஞானி: எதிலும் நோக்கம் அதிகமாக இருப்பது.

சீடன்: தொண்டர்கள் என்பவர்கள் யார்?

ஞானி: கடமையைச் செய்தவர்கள்.

சீடன்: தொண்டில் சிறந்தது எது?

ஞானி: வழி காட்டியாகச் செய்யும் தொண்டு.

சீடன்: மனிதன் பக்தியைக் கொள்வது எப்போது?

ஞானி: தேவை என உணரும்போது.

சீடன்: இறையுணர்வு எப்பொழுது வரும்?

ஞானி: அது இயக்கமாக தானாக வளர வேண்டிய ஒன்று.

சீடன்: அதற்கு செய்ய வேண்டியது என்ன?

ஞானி: முதலில் ஒரு வழிகாட்ட குருவைத் தேடு,

சீடன்: சிந்தனையாளன் என்பவன் யார்?

ஞானி: சார்புடைய எண்ணங்களுக்கு கட்டுப்படாதவன்.

சீடன்: ஒழுக்கம் என்றால் என்ன?

ஞானி: முதலில் உன்னைத் தெரிந்து கொள்வது.

சீடன்: பக்தி மார்க்கம் எப்பொழுது தெரியும்?

ஞானி: மனம் சிரிக்கும் போது.

சீடன்: நல்ல மனிதன் யார்?

ஞானி: உள்நோக்கம் இல்லாதவன்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை

# tabloid வடிவில்

4, 8, 12, 16 பக்கங்களில்

இதுபோன்ற **சிறப்பு மலராக** வெளியிட தொடர்பு கொள்ளவும்

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!


தொடர்ப்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203




# ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 176 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை




பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...

## aanmeegamalar.com




தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com